விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 30 திங்கட்கிழமை (16.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

# ஜனாதிபதி, பிரதமருக்கு
# எமது முழுமையான ஆதரவு

## தேசிய தீபாவளி விழாவில் நேரில் தெரிவித்தார் சம்பந்தன்



(கொழும்பு) புதிய அரசியலமைப்பை உருவாக்கி இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் புதிய பயணத்தை ஜனாதிபதியும் பிரதமரும் ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்கு நாம் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவு வழங்குவதுடன் அதில் எவ்வித சந்தேகமுமில்லையென எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். (23-ம் பக்கம் பார்க்க...)

## புலிகளுக்கு ஒருபோதும் விடுதலை இல்லை
### சரத் பொன்சேகா

(கொழும்பு)

சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் எவரும் அரசியல் கைதிகள அல்ல. ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகளை எவ்வாறு அரசி 24

## மலேரியா
## விழிப்புடன் இருக்க வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை அண்டிய 23

## வட - கிழக்கு இணைப்பு பீதியை கிளப்ப வேண்டாம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு தெரிவித்து எழுதிக் கொடுக்கவில்லை. முஸ்லிம்கள் மத்தியில் தேவையில்லாத பீதியை கிளப்ப வேண்டாம் என ஶ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார். (விரிவான செய்தி 7-ம் பக்.)

## வட - கிழக்கு சமஷ்டி அடிப்படையில் மதசார்பற்றதாக உருவாக வேண்டும்
### விக்னேஸ்வரன் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

வட- கிழக்கை பௌத்தநாடு என்ற அடைமொழியின் கீழ்கொண்டு வருவதை நான் கண்டிக்கின்றேன். மற்றைய ஏழு மாகாணங்களில் பௌத்தர்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் அவற்றில் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கலாம்.

வடக்கு -கிழக்கு மாகாணங்களோ சமஷடி அடிப்படையில் மதச் சார்பற்ற அலகாக உருவாக்கப்பட



வேண்டும் என முதலமைச்சா சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பன்னெடுங்காலமாக 23

## நாட்டை துண்டாட சதி என்கிறார் விமல்

(கொழும்பு)

வார்த்தைகளால் ஏமாற்றி நாட்டினை துண்டாடும் அரசியல் அமைப்பினை கொண்டுவரவே ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார் என தேசிய சுதந்திர முன்னணியின தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தத்தை முழுமையாக எதிர்த்த ஜே.வி.பியினர் இன்று நாட்டை துண்டாடும் 23

## வேட்பாளர்கள் தெரிவில் இறங்கியது கூட்டமைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான பெண் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பித்து விட்டது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், குழுக்கள் 25 வீதம் பெண் வேட்பாளர்களை உள்ளடக்க வேண்டும் என்ற புதிய சட்டம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்,

சட்டத்தின் தேவைகளுக்கு அமைய நாங்கள் செயற்படுவோம். பெண்களுடன் இணைந்து நாங்கள் பணியாற்றுகிறோம். வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு 24

## இது நாட்டுக்கு நல்லதல்ல மகா நாயக்கர்கள் கடிதம்!

(கொழும்பு)

சைட்டம் நிறுவனத்தை அடிப்படையாக கொண்டு ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்ப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் நாட்டுக்கு நல்லதல்ல என பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு 24

## யாழ்ப்பாணத்தில் டெங்கு அச்சுறுத்தல்; நேற்று மட்டும் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகிய பாடசாலை மாணவி உட்பட இருவர் நேற்றைய தினம் யாழ் போதனா மற்றும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியை சேர்ந்தவரும் யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்றுவரும் மாணவியான கணேசமூர்த்தி சாறா (வயது 9) மற்றும் இணுவிலை சேர்ந்த திருமதி எஸ்.மல்லிகாதேவி (வயது49) ஆகியோரே மேற்படி டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகி உயிரிழந்தவர்களாவர்.

மேற்குறித்த பாடசாலை மாணவி கடந்த 11 ஆம் திகதி உடல் சோர்வுற்ற நிலையில் தனியார் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளார்.

பின்னர் 12,13 ஆம் திகதிகளில் தொடர்ச்சியான காய்ச்சல் காரணமாக மீண்டும் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். அதற்கும் குணமடையாத 24

PSP Rent a Car
Thirunelvely
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு
(C-007)


- Prius hybrid - CAT
- Premio - CAB
- Premio - KF
- Axio - KM
- Axio - KL
- Axio - KI
- Nissan 16 - KD
- Nissan 15 - KD
- Alto - KI
- Indica - KI
- Dawoo - 18

தொடர்பு :
0773777502
077 785 2456

## 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கில் 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியில் 50ஆயிரம் வீட்டுத்திட்டங்கள் உட்பட வாழ்வாதார திட்டங்களை எதிர்வரும் 2018ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த உள்ளதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஜனாதிபதி மைத்திரிபால 24

## அரசியல் கைதிகளின் உறவுகள் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட பாவித்த நல்ல நிலையில் உள்ள வெளி இணைப்பு இயந்திரங்கள் YAMAHA 25 HP, YAMAHA 30 HP உடன் விற்பனைக்குண்டு.

**0764280010, 0774366704**


# தென்னிலங்கை மீனவருடன் கட்டைக்காட்டில் சர்ச்சை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோதமாக கடலட்டை பிடிக்கும் தென்னிலங்கை மீனவர்களால் கடலில் வைத்து ஒருவர் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பளை வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து தென்னிலங்கை மீனவர்களுக்கும் கட்டைக்காடு மீனவர்களுக்குமிடையில் கடலில் முரண்பாடுகள ஏற்பட்டதாக தெரிய வருகிறது. (மு-60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புக்கு
021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்



### கணேசமூர்த்தி சாறா

(யா/சென்.பொஸ்கோ பாடசாலையின் 4ஆம் ஆண்டு மாணவி)

பிறப்பு:-24.03.2008

இறப்பு:-15.10.2017

செ.கணேசமூர்த்தி சாறா (என்ர பிறைஸ் சொந்தக்காரர்) அவரது மனைவி மஞ்சுளா கணேசமூர்த்தி (ஆசிரியை யாழ்.பரியோவான் கல்லூரி) ஆகியோரது சிரேஷ்ட புத்திரி சாறா கணேசமூர்த்தி 15.10.2017 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த சாறா-கணேசமூர்த்தி டெரிக் அவர்களின் அன்பு அக்காவும், திரு.திருமதி. தருமநாயகத்தின் அன்புப் பேர்த்தியும், சரளா ஜெயரத்தினம் அவர்களது அன்பு பெறாமகளும், தருமநாயகம், சூரியகுமார் அவர்களது அன்பு மருமகளும், அண்ணன் மார்களான J.J.போல், J.J.லூக் ஆகியோரின் அன்புச் சகோதரியும், S.ஆனல்ட், S.அனோஜன், S.ஆருஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மு.செல்லர் அவர்களின் அன்புப் பேர்த்தியும், செ.லட்சுமி அவர்களின் அன்புப் பேர்த்தியும், செ.தபேந்திரன், செ.தங்கராசா ஆகியோரின் அன்புப் பெறாமகளும், நா.சரஸ்வதி, இ.குணேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

இவரது நல்லடக்க ஆராதனை இன்று 16.10.2017 திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு 43/11 யாழ்.கலட்டி அம்மன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக திருவுடல் யாழ்.கொட்டடியில் உள்ள மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43/11 கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-P. தருமநாயகம்
0777588834

(1031)

## 3ஆம் ஆண்டு நினைவாக...



### அமரர் தம்பிமுத்து இரத்தினம்

அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவாக நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை 15ஆம் திகதி சைக்கிள் ஓட்டப்போட்டி நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை அன்னாரின் இல்லத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப் பட உள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



(771)

சாந்தை, பண்டத்தரிப்பு    தகவல்:-குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயர்திரு.அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன்

(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)




அவர்களை சீரும் சிறப்பும் பெற்று சமூக சேவைகளைத் தொடர்ந்து கிராம மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:-டாக்டர் சி.சண்முகநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர் (ஆங்கிலம்)
யாழ்.பல்கலைக்கழகம்

முத்துமாரி அம்மன் கோயிலடி,
அல்வாய்.

(சி-010)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை கணேஸ்

(முன்னாள் கட்டிட ஒப்பந்தகாரர்)

பிறப்பு:-24.10.1945

இறப்பு:-15.10.2017

தாவடி தெற்கு காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேஸ் அவர்கள் 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் , காலஞ்சென்ற ஆறுமுகம் தங்கம்மாவின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி (சின்னக்குஞ்சு) அவர்களின் பாசமிகு கணவரும், பிறேமாவின் பாசமிகு தந்தையும், இரத்தினசிங்கத்தின் மாமனாரும், றொபின், றொமிலா, மரீனா, கபினா, றோயன், பிரிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடாவில் 21.10.2017 சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:-
இரத்தினசிங்கம்
ராஜகிரி (ராசா)
0779369281,
0016476331561

(1032)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்போம்

## இந்தியா, இலங்கை உறுதி

(சென்னை)

இருநாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்போம் என இந்தியாவும், இலங்கையும் உறுதிபடத் தெரிவித்துள்ளன.

தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றால், அவர்கள் பத்திரமாக கரைக்கு திரும்புவது கேள்விக்குறியாக உள்ளது. அவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தால், எல்லை தாண்டி வந்து மீன் பிடித்தார்கள் என்று குற்றம் சாட்டி, அவர்களை கைது செய்வது, படகுகளை கைப்பற்றுவது, சில நேரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்துவது, மீனவர்களின் உயிர்களைப் பறிப்பது என்பதை இலங்கை கடற்படை தொடர் கதை ஆக்கி வருகிறது.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்ற குரல் நீண்டகாலமாக ஓங்கி ஒலித்து வருகிறது.

இந்த நிலையில், டில்லியில் நேற்று முன்தினம் மத்திய விவசாய அமைச்சர் ராதாமோகன் சிங்கும், இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவும் சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பை தொடர்ந்து இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது,

கூடிய விரைவில், மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு இரு நாட்டு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பாக் ஜல சந்தி பகுதியில் ஆழ்கடலில் இரட்டை மடி வலைகளை போட்டு மீன் பிடிப்பதை முடிவுக்கு கொண்டு வருவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கை தரப்பிடம் இந்தியா சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார வாய்ப்புகள் குறித்தும் கூறப்பட்டது.

இந்தியாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட இலங்கைத் தரப்பினர் சட்டவிரோதமாக மீன்பிடிப்பதை தடுப்பதற்காக தாங்கள் எடுத்துள்ள நடவடிக்கை குறித்தும் விளக்கினர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-8)

# மானுடப்பண்பு உள்ளவர்களைத்தான் உலகம் வாழ்த்தும்

## சொல்வேந்தர் சுகி.சிவம் யாழில் உரை



(யாழ்ப்பாணம்)

எத்தனை பெரிய பதவிகளுக்கு வந்தாலும் அடிப்படையான மானுடப் பண்பு உள்ளவர்களை தான் உலகம் வாழ்த்தும் என தெரிவித்த சொல்வேந்தர் கலைமாமணி சுகி.சிவம், எவன் ஒருவன் இந்த பிரபஞ்சத்தின் எல்லா உயிர்களையும் நேசிக்கின்றானோ அவனுக்கு பஞ்ச பூதங்களும் கட்டுப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான பாரத ரத்னா கலாநிதி ஏ.பி.ஜே.அப்துல்கலாமின் 86 ஆவது பிறந்ததின நினைவு நாள் நேற்று யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த உலகில் சிலர் நபர்களாக பிறந்து நபர்களாகவே இறந்து விடுவார்கள், சிலர் நபர்களாக பிறந்து தத்துவங்களாக மறைந்து விடுவார்கள். அந்த சிறப்பு அப்துல் கலாமிற்கு உண்டு. யாரெல்லாம் அவரை ஒருமுறை சந்திக்கிறார்களோ அவர்கள் ஏதோ ஒரு தாக்கத்துக்கு உள்ளாவார்கள். எந்த இடத்துக்கு அவர் சென்றாலும் அந்த இடத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மானிட மின்னல் தான அப்துல்கலாம்.

எத்தனை பெரிய பதவிகளையும் தாண்டி மனிதனை மனிதனாக மதிக்கும் மாமனிதர் தான் அவர். அதை மனதார உணர்ந்தவர்களில் நானும் ஒருவன். எத்தனை பெரிய பதவிகளுக்கு வந்தாலும் அடிப்படையான மானுடம் இருந்தால்தான் அவர்களை உலகம் வாழ்த்தும். கொண்டாடும், அவர்களுக்காக கண்ணீர்விடும். இதற்கு முழுமையான தகுதியுடன் வாழ்ந்தவர் அப்துல்கலாம் தான்.

ஜவஹர்லால் நேருவுக்கு பின்னர் இந்திய வரலாற்றில் இளைஞர்களோடும் மாணவர்களோடும் நெருங்கிய ஆத்மார்த்தமான உறவு கொண்டிருந்த தலைவர் இவர். மாணவர்களை மிக அதிகமாக நேசித்தார். ஒரு பாடசாலை நிகழ்வில் கலந்து கொண்டு ஐஸ்வர்யாவை உலக அழகியாக தேர்ந்தெடுப்பதற்கு என்ன காரணம் என மாணவர்களிடையே கேட்டார், பலர் பலவிதமான கருத்துக்களை கூறினார்கள்.

அவர் அந்த பதில்களில் திருப்தி அடையவில்லை. நான் அந்த நிகழ்வில் கலந்து கொள்ளாததால் வேறு வழியின்றி ஐஸ்வர்யாவை உலக அழகியாக தேர்ந்தெடுத்து விட்டார்கள் என ஒரு மாணவி தெரிவித்தார். அந்த மாணவியின் கருத்தை அவர் வரவேற்றார்.

அதன் அர்த்தம் நம்பிக்கை இல்லாத சமூகத்தை நீங்கள் கட்டமைக்க முடியாது ஐஸ்வர்யாராய் தான் அழகி என எண்ணிக்கொண்டிருந்தால் பெண்கள் உருப்பட முடியாது. நாம் எல்லோருமே அழகி என பெண்கள் நம்பத்தொடங்கினால் தான் உண்மையான வெற்றியை அடைய முடியும் என அப்துல் கலாம் விரும்பினார்.

இவை எல்லாம் அவருடைய மானிட பண்புக்கு உரிய உதாரணங்கள் ஆகும். உலகம் முழுவதுக்குமான மானுடத்துக்கான ஒரு செய்தியை வழங்கினார். மிகச் சிறந்த நற்பண்புகளால் ஒரு மனிதன் மிக உயர்ந்த இடத்தை அடைய முடியும் என்ற ஒரு வாழ்க்கை செய்தியையும் வழங்கியிருந்தார்.

விஞ்ஞானம் உலகத்தின் நன்மைக்கு பயன்பட வேண்டுமே தவிர விஞ்ஞானம் ஆக்கிரமிப்பாக மனித குலத்தை கபளீகரம் செய்வதாக இருக்கக்கூடாது. மனித வளர்ச்சிக்கு உதவுவதாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்கு அடையாளமாக அப்துல்கலாம் இருந்தார்.

அவர் சாதாரண மனிதர் தான். இயல்பானவர். ஆனால் அவர் நடந்து கொள்ளும் விதம் அவர் இருக்கும் இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள் வியப்பானவை. எவன் ஒருவன் இந்த பிரபஞ்சத்தின் எல்லா உயிர்களையும் நேசிக்கின்றானோ அவனுக்கு பஞ்ச பூதங்களும் கட்டுப்படும். அதற்கு அப்துல்கலாம் அடையாளமாக இருந்தார்.

அவரைப் போல் மாமனிதர்களின் உறவுகளைப் பேணத் தொடங்கினால் உலக நாடுகளிடையே நல்ல நட்புறவு மலரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மகிந்தவை அழ வைத்த மகன்



(கொழும்பு)

சிறை வைக்கப்பட்டுள்ள தனது மகனை பார்வையிடச் சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண் கலங்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

தந்தையாக மகனின் நிலை கண்டு தடுமாறிய மகிந்த பெரும் கவலை அடைந்ததாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்காலையில் சிறை வைக்கப்பட்டுள்ள நாமலை, மகிந்த ராஜபக்ஷவுடன் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ ஆகியோர் நேற்று சென்று பார்வையிட்டனர்.

நாமலை பார்வையிட்ட பின்னர் மகிந்த பெரும் சோகத்துடன் வெளியேறும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ளன. சிறைச்சாலையை விட்டு வெளியே வந்த மகிந்த ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

"இந்த நாட்டு சொத்துக்களை விற்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுகின்றனர். விற்பனை செய்ய முயற்சிக்கும் துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் மீது நாட்டு மக்களுக்கும் உரிமை உண்டு.

இன்று வடக்கில் சட்டம் இல்லை. வடக்கிற்கு தேவையான வகையிலேயே சட்டம் உள்ளது. இவர்கள் வாக்கு பெற வேண்டும் என்பதற்காக அப்படி ஒன்றை செய்து கொடுத்துவிட்டு பார்த்து கொண்டிருக்கின்றார்கள்.

சுதந்திரம் என்பது இது தான். இங்கு சிறைப்படுத்தப் பட்டிருப்பது அப்பாவி மக்கள். முஸ்லிம் பிள்ளைகள், பாடசாலை மாணவர்கள், அப்பாவி தாய்மார்கள் இங்கு உள்ளனர்.

இது ஒரு மிகப்பெரிய குற்றமாகும்" என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை நீதிமன்ற உத்தரவை மீறி மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ உட்பட குழுவினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்திற்கு தடையுத்தரவு



(கொழும்பு)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்து நேற்றைய தினம் தங்காலையில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவை தங்காலை நீதிமன்றம் நேற்று பிறப்பித்துள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களான டி.பி.உபுல் மற்றும் அஜீத் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பிரகாரம் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தை இந்தியாவிற்கு வழங்குவதை எதிர்த்து நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி போராட்டம் நடத்திய குற்றச்சாட்டுக்காக நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அறுவர் அம்பாந்தோட்டை பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து குறித்த ஆறு பேரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில், இன்றைய தினம் வழக்கு மீதான விசாரணை அம்பாந்தோட்டை நீதிமன்றில் எடுத்து கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் போராட்டம் நடத்த கூட்டு எதிரணி திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷை சாதனையுடன் வென்றது தென்னாபிரிக்கா

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் குயின்ரன் டி ஹொக், அம்லா சதம் விளாச, தென்னாபிரிக்கா 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சாதனை வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நேற்று கிம்பெர்லே யில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி தலைவர் மோர்டசா முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பங்களாதேஷ் அணிக்கு ரபாடா ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்தார். இவரது 'வேகத்தில்' இம்ருல் கெய்ஸ் (31), லிட்டன் தாஸ் (21) சிக்கினர். சகிப் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். முஷ்பிகுர் ரகிம் சதம் விளாசினார். மகமுதுல்லா (26), சபிர் ரஹ்மான் (19) ஏமாற்ற,

பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 278 ஓட்டங்கள் எடுத்தது. முஷ்பிகுர் ரகிம் (110) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென்னாரிக்கா சார்பில் ரபாடா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



### குயின்டன் அசத்தல்

பின், களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு குயின்ரன் டி ஹொக், அம்லா ஜோடி 'சுப்பர்' ஆரம்பம் கொடுத்தது. குயின்ரன ஒரு நாள் அரங்கில் 13ஆவது சதம் எட்டினார். அம்லா 26ஆவது சதத்தை பதிவு செய்தார்.

தென்னாபிரிக்க அணி 42.5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 282 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. குயின்டன் (168), ஆம்லா (110) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை குயின்டன் வென்றார்.

### சிறந்த 'சேஸ்'

ஒரு நாள் அரங்கில் விக்கெட் இழப்பின்றி அதிக ஓட்டங்களை (279) வெற்றிகரமாக அடைந்த அணி என்ற சாதனையை தென்னாபிரிக்கா எட்டியது. இதற்கு முன், இங்கிலாந்து அணி 255 ஓட்டங்களை (எதிர்- இலங்கை, பேர்மிங்காம், ஜுன் 2016) வெற்றிகரமாக அடைந்ததே சாதனையாக இருந்தது.

### அம்லா சாதனை

இந்த போட்டியில் ஹசிம் அம்லா அடித்த சதம், அவரின் 26ஆவது சதமாகும். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிக சதம் அடித்த வீரர் என்ற விராட் ஹோலியின் சாதனையை முறியடித்துள்ளார். விராட் ஹோலி 166 இன்னிங்சில் 26 சதமும் டெண்டுல்கர் 247 இன்னிங்சில் 26 சதமும் ரிக்கி பொண்டிங் 286 இன்னிங்சில் 26 சதமும் அடித்துள்ளனர்.

ஹசிம் அம்லா 157 போட்டியில் 154 இன்னிங்ஸ் மூலம் இந்த சாதனையை படைத்துள்ளார்.

### முதல் வீரர

நேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய முஷ்பிகுர் ரகிம் சதம் அடித்தார். இதன்மூலம், தென்னாபிரிக்காவுக்கு எதிராக மூன்றுவிதமான போட்டியிலும் சதம் விளாசிய முதல் பங்களாதேஷ் வீரர் என்ற பெருமை பெற்றார்.

### சகிப் 5000

பஙகளாதேஷின் சகிப் 17 ஓட்டங்கள் எடுத்த போது, ஒரு நாள் அரங்கில் 5000 ஓட்டங்களை எட்டினார். இதன் மூலம், ஒரு நாள் அரங்கில் அதிவேகமாக 5000 ஓட்டங்கள் மற்றும் 200 விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற சாதனை படைத்தார். இதுவரை, 178 போட்டியில் 5012 ஓட்டங்கள் மற்றும் 224 விக்கெட்டுக்கள் எடுத்துள்ளார்.



ரியான்ஜின் ஓபன் டென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா சம்பியனானார். நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் பெலாரஸின் சபில் லென்காவை 7-5, 7-6 என்ற நேர் செட்கணக்கில் வீழ்த்தினார்.

## ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ்

# வாகைசூடினார் பெடரர்



சம்பியன் கிண்ணத்துடன் பெடரர், ரன்னர் அப் விருதுடன் நடால்

சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் உலகின் நம்பர் வன் வீரரான ரபேல் நடாலை வீழ்த்தி சுவிட்ஸர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம் மற்றொரு டென்னிஸ் மேதை இவான் லெண்டில் சாதனையான 94 சம்பியன் பட்டங்கள் என்ற சாதனையை பெடரர் சமன் செய்தார்.

சீனாவின் ஷாங்காய் மாகாணத்தில் ஷாஙகாய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் இறுதி போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயின் நாட்டை சேர்ந்த ரபேல் நடால் மற்றும் சுவிட்ஸர்லாந்து நாட்டை சேர்ந்த ரோஜர் பெடரர் ஆகியோர் மோதினர்.

இறுதி ஆட்டத்தில் முதலில் இருந்தே ரோஜர் பெடரர் ஆதிக்கம் செலுத்தி வந்தார். ரபேல் நடாலும் போராட்டத்தை வெளிப்படுத்தினார். முதல் சுற்றில் 6-4 என்ற கணக்கில் பெடரர் கைப்பற்றினார்.

இரண்டாவது சுற்றிலும் பெடரர் கையே ஓங்கியிருந்தது. இறுதியில் பெடரர் 6-3 என்ற கணக்கில் இரண்டாவது செட்டையும் கைப் பற்றினார். இந்த போட்டி 71 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது.

இதையடுத்து, ரோஜர் பெடரர் 6-4, 6-3 என்ற செட்களில் ரபேல் நடாலை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். ஷாங்காய் மாஸ்டர்ஸ் ஓபனில் இது இவரது இரண்டாவது பட்டமாகும்.

ஏற்கெனவே அவுஸ்திரேலியன் ஓபன் மற்றும் மியாமி ஓபன் தொடரில் ரபேல் நடாலை பெடரர் வீழ்த்தியிருந்தது குறிப்பிடத் தக்கது.

# புதுமாப்பிள்ளை ஸ்ரோக்ஸ்



இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஸ்ரோக்ஸ் நீண்டகால தோழியான கிளாராவை திருமணம் செய்தார்.

இங்கிலாந்து நட்சத்திர சகலதுறை வீரரான ஸ்ரோக்ஸ், சர்ச்சைகளுக்கு புகழ்போனவர். சமீபத்தில், இரவு விடுதியிலிருந்து புறப்பட்ட ஸ்ரோக்ஸ் மற்றொரு நபருடன் மோதலில் ஈடுபட்டார். இதில் பலத்த காயம் ஏற்பட்டதால், ஸ்ரோக்ஸ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின் விடுதலை செய்யப்பட்டாலும் விசாரணை தொடர்கிறது.

### தோழியை கரம்பிடித்தார்

இந்நிலையில், ஸ்ரோக்ஸ் நீண்டகால தோழியான கிளாரா ரெட்கிளிப்பை கரம் பிடித்தார். இவர்களின் திருமணம் சமர்செட் பகுதியில் உள்ள தேவாலயத்தில் நடந்தது. இதில், சக இங்கிலாந்து வீரர்களான அலெஸடர் குக், ஸ்ரூவேர்ட் பிரோட், அணித் தலைவர் ஜோ ரூட், பட்லர் உள்ளிட்டோர் பங் கேற்றனர். சமீபத்திய, மோதலில் ஏற்பட்ட காயத்திற்காக ஸ்ரோக்ஸ் வலது கையில் 'பேன்டேஜ்' அணிந்திருந்தார். திருமண 'ராசி' ஸ்ரோக்சின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக அமையுமா என பார்ப்போம்.

# இந்தியாவை வந்தடைந்தது நியூசிலாந்து

## புதுமுகங்களுடனான அணி அறிவிப்பு



இந்தியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்பதறகாக கேன் வில்லியம்ஸன் தலைமையிலான நியூஸிலாந்து அணி நேற்று முன் தினம் மும்பையை வந்தடைந்தது.

இந்தியா-நியூசிலாந்து அணிகள் மூன்று ஒருநாள், மூன்று சர்வதேச 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒரு நாள் போட்டி வரும் 22இல் மும்பையில் நடக்கவுள்ளது. மீதமுள்ள போட்டிகள் புனே (ஒக். 25), கான்பூர் (ஒக். 29) நகரங்களில் நடக்கவுள்ளன. மூன்று 'ரி20' போட்டிகள் டில்லி (நவ. 1), ராஜ்கோட் (நவ. 4), திருவனந்தபுரம் (நவ. 7) நகரங்களில் நடக்கவுள்ளன.

இததொடருக்கு முன், நியூசிலாந்து அணி, இரண்டு (ஒக். 17, 19, இடம்: மும்பை) ஒரு நாள் பயிற்சி போட்டியில், இந்திய போர்ட் பிரசிடென்ட் லெவின் அணியுடன் விளையாடுகிறது.

இதற்காக 9 பேர் கொண்ட நியூசிலாந்து அணியினர் மும்பை வந்தனர். மீத முள்ள 6 பேர், இந்தியா 'ஏ' அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரில் பங்கேற்று வரும் நியூசிலாந்து 'ஏ' அணியில் இருந்து தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் அறிமுக வீரர்களான டாட் அஸ்லே, கிளென் பிலிப்ஸ் வாய்ப்பு பெற்றனர். இவர்களை தவிர மட் ஹென்றி, ஹென்றி நிக்கோல்ஸ், கொலின் முன்ரோ, ஜோர்ஜ் வொர்க்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' அணியில், ஒரு நாள் தொடரில் இடம்பெற்றுள்ள றோஸ் டெய்லர், ஜோர்ஜ் வொர்க்கர் நீக்கப்பட்டு ரொம் புரூஸ், இஷ் சோதி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து 'டுவிட்டரில்' நியூசிலாந்து வீரர் றோஸ் ரெய்லர், மீண்டும் இந்தியாவுக்கு வந்ததில் "மகிழ்ச்சி" என பதிவிட்டிருந்தார்.

**ஒரு நாள் போட்டி அணி:** வில்லியம்ஸன் (அணித் தலைவர்), டாட் அஸ்லே, டிரணட் பேல்ட், கொலின் டி கிராண்ட் ஹோம், மார்டின் கப்டில், மட் ஹென்றி, ரொம் லெதாம், ஹென்றி நிக்கோல்ஸ், அடம் மில்ன், கொலின் முன்ரோ, கிளென் பிலிப்ஸ், மிட்சல் சான்ட்னர், டிம் சௌதி, றோஸ் ரெய்லர், ஜோர்ஜ் வொர்க்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32 நாடுகள் | 1098 கவிஞர்கள் | 1861 ஏ4 பக்கங்கள் | 04.415 கி.கிராம்

வள்ளுவர்புரம்

# செல்லமுத்து வெளியீட்டகம்

வழங்கும்...

# 1000 தமிழ் கவிதைகள்

# பெருநூல் வெளியீட்டு விழா

**காலம்**

21.10.2017 சனிக்கிழமை


**நேரம்**

காலை 9.30 மணி

(09.15 மணிக்கு நிகழ்வுக்கு ஆயத்தமாகுதல்)

**இடம்**

வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்.



பொதுத்தொடர்பு: (0094) 775892351 tamilkavithaikal1000@gmail.com

செயலியக்குநர்
**யோ.புரட்சி**

பதிப்புரிமை
**யமுனா நித்தியானந்தன்**

துரிதமான துல்லியமான அச்சுவேலைகளுக்கு
VIJAY
PRINTING PRESS
172, மில் வீதி, வவுனியா.
077 9009491
024 2225799
(சி-009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலைக்கு மாற்றுப் பயிர்ச் செய்கை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் யாழில் விவசாய அமைச்சர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள புகையிலைச் செய்கையாளர்களுக்கான மாற்று பயிர்ச் செய்கை தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.



"விளைச்சல் பெருகிட ஒருமித்து எழுவோம்" எனும் தொனிப்பொருளில் தேசிய உணவு உற்பத்திப் புரட்சி திட்டத்தின் வட மாகாணத்துக்கான நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் புத்தூர், நிலாவரைப் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஜனாதிபதியுடன் கலந்துரையாடும் போதே மேற்குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் புகையிலைச் செய்கையை நம்பி அதிகளவான விவசாயிகள் உள்ளனர். குறித்த புகையிலைச் செய்கை நாட்டில் முற்றாகத் தடை செய்யப்படவுள்ள நிலையில் இந்தச் செய்கைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை ஒன்று அறிமுகப்படுத்த வேண்டியது மிக முக்கியம் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். புகையிலைச் செய்கை மேற்கொள்பவர்களது தரவுகளைப் பெற்று வருமாறும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி பதிலளித்திருந்தார்.

மேலும் உருளைக் கிழங்கு இறக்குமதியை குறைத்து நாட்டுக்கு தேவையான உருளைக்கிழங்கை யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்வதற்கான வசதிகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். (இ- 9)

# 'எமது நாடு எமது மக்கள்' புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை கட்டியெழுப்பல் மற்றும் மீளிணக்கத்திற்கான ஒன்றியத்துடன், Young Visionary மற்றும் Young Creativists இன் காட்சிக் கலைப் பிரிவான Voice of Image இணைந்து வழங்கும் "எமது நாடு எமது மக்கள்" எனும் புகைப்படக் கண்காட்சியுடன் கூடிய கலந்துரையாடலுக்கான திறப்பு விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். திருமறைக்கலாமன்றத்தில் இடம்பெறும். (இ-7-51)

# தரம்-6 அனுமதிக்கு விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தரம்-6 புதிய வகுப்பிற்கான அனுமதிகள் (ஆங்கில மொழிமூல வகுப்பு உட்பட) கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று 2017.10.30 இற்கு முன்னர் பூரணப்படுத்தி ஒப்படைக்கவும் என அதிபர் ரி.வரதன் அறிவித்துள்ளார். (இ)

## கணேசரட்ணத்தின் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி, சத்திர சிகிச்சை நிபுணர் அமரர் மயிலு கணேசரட்ணத்தின் நினைவேந்தல் நிகழ்வு நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)




பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த பரசளிப்பு விழாவின் போது...

## செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதிய தேர்முட்டிக்கு அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதிய தேர் முட்டிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-7)

## கந்தசஷ்டி விழா

(யாழ்ப்பாணம்)

சரவணை- பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோவில் கந்தசஷ்டி விழா எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஏழு நாட்களுக்கு நடைபெறும் என முருகமூர்த்தி திருக்கோவில் அறங்காவற் சபை தலைவர் சு.மகேந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)

# அரச நடனப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நடன நாட்டிய நாடக ஆலோசனைக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள அரச நடனப் போட்டி-2018 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் போட்டிக்குரிய சுற்று நிருபம் மற்றும் விண்ணப்பப்படிவம் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நிபந்தனைகளுக்கு அமைவாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. வி.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி.

### மாணிக்கம் கிருஸ்ணன்



எமது கல்லூரி ஆசிரியர்
கிருஸ்ணன் செல்வராசா அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி. மாணிக்கம் கிருஸ்ணன்
அவர்கள் 14.10.2017 அன்று
காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும்
அவரின் குடும்பத்தினருக்கு
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(027)

பாடசாலைச் சமூகம், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்


# இராசி பலன்

16.10.2017
(புரட்டாதி 30, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
துவாதசி பின்னிரவு 1.28 மணிவரை
மகம் முற்பகல் 8.11 மணிவரை
சுபநேரம்- 12.02-1.32 மணிவரை
இராகுகாலம்- 7.32-9.02 மணிவரை
சர்வதேச உணவு தர நிர்ணய தினம்,
அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம் | | ராகு |
| கேது | | | சந், |
| | சனி | குரு, புத | சூரி, சுக், செவ் |

**மேடம்:** பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கூடும் நாள்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அதிகரிக்கும் நாள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், சிந்தனை மிகுதியான நாள், போசன நன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** ரோக பயமுண்டு, அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் கூடும், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**துலாம்:** தெய்வநிலை உயரும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மீனம்:** அலுவலகப் பணிகள் துரிதமாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அலட்டிக்கொள்ளாது

## அதன் தலைவர் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பிலோ பிரிப்பு தொடர்பிலோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த விதத்திலும் அலட்டிக் கொள்ளாது என, அக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு இணைக்கப்பட வேண்டுமானால் தனி முஸ்லிம் மாகாணம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் மாறாது எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - காத்தான்குடி கடற்கரை வீதியில் உள்ள விடுதியொன்றில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே ஹக்கீம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அணி தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான சிப்லி பாறுக்கின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில்பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா, முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் உட்பட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் காலத்தில் வரவுள்ள உள்ளூராட்சி தேர்தலின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்,எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பல உள்ளூராட்சி மன்றங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றும்.

சில உள்ளூராட்சி மன்றங்களின் வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாக காங்கிரஸ் விளங்கும்.

இதற்கான செயற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். கட்சிக்குள் முரண்பாடுகள் இருக்கலாம். அவற்றினை எல்லாம்ஒருபுறம்ஒதுக்கி வைத்து விட்டு கட்சியினை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு கட்சி போராளிகளுக்கு உள்ளது.

காத்தான்குடியை பொறுத்த வரையில் கடந்த ஒன்றரை வருடத்தில் வரலாறு காணாத அபிவிருத்திகளை எமது கட்சி செய்துள்ளது.

45 கோடிக்கு மேல் நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கழிவுநீர் முகாமைத்துவ திட்டத்திற்க 100 மில்லியன் டொலருக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கான வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும். வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பில் சிலர் தேவையற்ற கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனை எழுதிக் கொடுத்தது போன்று சிலர் கதைக்கின்றனர்.

சிலர் அதனை வைத்து மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்த முனைகின்றனர். முதலில் அரசியல் என்பது என்ன என்பது தொடர்பான புரிதல் இருக்க வேண்டும்.

சாத்தியமானவற்றை சாதித்துக் கொள்கின்ற கலை தான் அரசியலாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே இருக்கின்ற தரப்புகளின் தலைமைகளுக்கு வடக்கு-கிழக்கு இணைப்பு என்கின்ற விடயத்தின் சாத்தியப்பாடு சம்பந்தமாக என்ன தெரியும் என்கின்ற விடயம் எனக்குத் தெரியாது.

ஆனால் இந்த நாட்டிலே இருக்கின்ற தெளிவான அரசியல் ஞானம் இருக்கின்ற எல்லோருக்கும் தெரிந்த விடயம் தான். அரசியல் யாப்பு சொல்கின்ற விடயம். முஸ்லிம் காங்கிரஸினுடைய நிலைப்பாடு என்னவெனில் நாங்கள் இணைப்பு, பிரிப்பைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

நாங்கள் தமிழர்களின் அபிலாசைகளுக்கு குறுக்காக நிற்பவர்கள் என்பதை காட்டப் போவதுமில்லை.

சிங்களவர்கள் மத்தியில் சில விடயங்களுக்கு கூஜா தூக்கிகளாக பார்க்கப்பட வேண்டிய அவசியமுமில்லை.

எங்களை பாவித்து சிங்கள சமூகம் தமிழர்களுக்கு எதனையும் செய்வதை தடுப்பதற்கு நாங்கள் உடந்தையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் ஒரு நடுநிலையான சமூகம்.

ஒரு மாகாணம் இன்னுமொரு மாகாணத்துடன் இணைவது என்றால் அந்த மாகாணத்தில் உள்ள மக்களின் அபிப்பிராயங்களை கேட்காமல் செய்ய முடியாது.

பாராளுமன்றத்தின் பெரும்பான்மையில்லாமல் மாகாணங்கள் இணைய முடியாது. இது அரசியல் யாப்பில் உள்ள விடயம். இவ்வாறு இருக்க அதனை வேறு வகையில் சொல்லி பீதியை கிளப்ப சிலர் முயல்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"க்கு உள்ள பாரம்பரிய கொள்கைகளை நாங்கள் தொடர்ந்து பேணி வருகின்றோம். வடக்கு-கிழக்கு இணைப்பு என்றால் முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் என்பது எமது கோரிக்கையும் கொள்கையும்.

அதில் இருந்து நாங்கள் மாறவில்லை. இணைவுக்கு என்ன தேவையென்பதை யாப்பும் சட்டமும் சொல்கின்றது.

அரசியல் அறிவு உள்ளவர்களுக்கு இந்த யதார்த்தம் தெளிவாக தெரியும்.

சர்வதேசம் வந்து வலுக்கட்டாயமாக வடக்கு-கிழக்கினை இணைத்துவிட்டு எங்களை நட்டாற்றில் விட்டு விடும் என சிலர் கருதுகின்றனர். தமிழ்த்தேசிய தலைமைகளுக்கும் தெரியும் முஸ்லிம்களின் சம்மதம் இல்லாமல் அது சாத்தியமில்லை யென்று. அதனை அவர்கள் மிக தெளிவாக கூறுகின்றனர்.

வடக்கு- கிழக்கு பிரிப்பு நடந்ததும் காகம் உட்கார பனம் பழம் வீழ்ந்த கதையாகவே உள்ளது. அதனையும் நாங்கள்தான் செய்தோம் என சிலர் கூறித்திரிகின்றனர். பாராளுமன்றம் செல்வதற்கு வாக்குப் பற்றாக்குறையாகவுள்ள சிலர் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இவற்றினை கூறுகின்றனர்.

நான் கண்டி மாவட்டத்தில் தேர்தல் கேட்டு வெற்றி பெறுகின்றவன். 20 ஆயிரத்திற்கும் குறையாத வாக்கினை சிங்கள மக்கள் எனக்கு வழங்கியுள்ளனர். நான் வடக்கு- கிழக்கினை பிரியென்றும் இணையென்றும் எங்கும் பேசியது கிடையாது. அதனை கதைத்திருந்தால் ஒரு பத்தாயிரம் வாக்கினை அதிகரித்திருக்க முடியும். அது எனக்கு தேவையில்லை.

நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர். எனக்கு பொறுப்புணர்ச்சியிருக்கின்றது. தேவையற்ற கருத்துகளை தெரிவிப்பதினால் அர்த்தமில்லை. சும்மா கிடக்கும் சங்கை ஊதி கெடுக்க முடியாது.

தமிழ் -முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள உறவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றாவது ஒரு நியாய பூர்வமான இணக்கப்பாட்டை அடையலாம் என்ற நம்பிக்கையில் கொஞ்சமாவது எஞ்சியிருக்கின்றது என்பது எமக்கு பிரயோசனமாக இருக்கும். அவ்வளவு தான். அதனைவிட பல பிரச்சினைகளை நாங்கள் தீர்க்க வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## சங்கானை வைத்தியசாலைக்கு ஆய்வுகூட மருத்துவ உதவியாளரை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு ஆய்வு கூட மருத்துவ தொழில்நுட்ப உதவியாளரை நியமிக்க வேண்டும் எனக் கோரி சங்கானை பட்டின அபிவிருத்தி சபையால் வடமாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

சங்கானை அரசினர் வைத்தியசாலை, பிரதேச வைத்தியசாலைகளின் தரத்தில் உள்ளது. இவ் வைத்தியசாலைக்கு நீண்ட காலமாக ஓர் ஆய்வுகூட மருத்துவ தொழில்நுட்ப உதவியாளரை நியமிக்காததால் டெங்கு நோயாளர்களை அடையாளம் காண்பதற்கும் ஏனைய மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் சிரமமாகவுள்ளது.

இதன் காரணமாக இது வரை காலம் இரத்த பரிசோதனைகளை வைத்தியசாலைக்கு வெளியே செய்ய வேண்டியிருப்பதால் ஏழைகள் பல கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். இவ் வைத்தியசாலைக்கு ஆய்வுகூட மருத்துவ தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டால் இவ் வைத்தியசாலையை சுற்றியுள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு இரத்த மாதிரிகளை ஆய்வு செய்து மருத்துவ அறிக்கையை வழங்க முடியும்.

எனவே இவ் விடயத்தை துரிதப்படுத்தி ஆய்வு கூட மருத்துவ தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரை நியமிக்குமாறு சங்கானை பட்டின அபிவிருத்தி சபையின் தலைவரும் நோயாளர் நலன் புரி சங்கத்தின் செயலாளருமான ஜி.குணஸ்ரீ வடமாகாண ஆளுநர் ஊடாக நேற்று முன்தினம் யாழ்.வந்த ஜனாதிபதியிடம் மகஜர் கையளித்துள்ளார். (இ-9)

## சாவகச்சேரியில் ஒரே இரவில் 44பேர் மீது வழக்குத் தாக்கல்

### போக்குவரத்து விதிகளை மீறியதற்காக

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 44 சாரதிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை சாவகச்சேரி பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மது போதையில் வந்த மூவர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்திய 44 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் உரிய வாகன ஆவணங்கள் இல்லாத மோட்டார் சைக்கிளொன்றும் போக்குவரத்துப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (இ-10-29)

## சமய தீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் சமய தீட்சை வழங்கல் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். இந் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் அறிவித்துள்ளார். (இ-7)

## சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

GFATM திட்ட உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை திறப்பு விழா நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-7)





கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய நூற்றாண்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் த.பாலகுமார் தலைமையில்இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டார்.

(படங்கள்:- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு காணி விடுவிக்காவிடின் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம்

## காணி உரிமையாளர்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொது மக்களின் காணி விடுவிப்பு விடயத்தில் இராணுவத்தை நம்பாது அரச அதிகாரிகளை நம்பி ஏமாந்து போயுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்ற அதே வேளை மீண்டும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் 19 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரி கடந்த பெப்ரவரி மாதம் ஒருமாத காலமாக மக்கள் தொடர்ந்து போராடி வந்தனர்.

இந்நிலையில் மக்களின் காணிகளை 3 கட்டங்களாக விடுவிப்பதாக இராணுவம் அறிவித்த போது அதனை மறுத்த மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் குறித்த விடயத்தை எழுத்து மூலம் தாம் தருவதாகவும் 3 கட்டங்களாக இராணுவம் விடுவிக்கும் என தெரிவித்து எழுத்துமூலமாக 20 பேரது 7.75 ஏக்கர் காணி இரண்டு வாரத்தில் விடுவிக்கப்படும். மிகுதி 29 பேரது 10 ஏக்கர் காணி முகாமில் அமை க்கப்பட்டுள்ள கட்டடங்களை நீக்கி புதிய இடத்துக்கு கொண்டு செல்வதற்காக இதற்கு 3 மாதங்கள் தேவைப்படுவதாகவும் 3 மாதத்தில் விடுவிக்கப்படும் எனவும் பொன்னம்பலம் வைத்தியசாலை காணியானது 6 மாதத்தில் விடுவிக்கப்படும் எனவும் எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கி முதற் கட்டமாக 20 பேரது 7.75 ஏக்கர் காணி விடுவிப்போடு மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

இருப்பினும் அரச அதிகாரிகளின் வாக்குறுதியை நம்பி ஏமாந்துள்ளதாகவும் 7 மாதம் கடந்தும் இரண்டாவது கட்டமாக விடுவிப்பதாக கூறிய காணியை கூட இது வரை விடுவிக்கவில்லை. ஆதலால் அதிகாரிகளை நம்பி ஏமாந்துவிட்டோம். வாக்குறுதி தந்தவர்கள் உடனடியாக தமது காணியை மீட்டு தரவேண்டுமெனக் கோரியிருந்தனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள காணி உரிமையாளர் ஒருவரின் வீட்டில் மக்களுக்கும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருக்குமிடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதன் இறுதியில் மக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக போராட்டத்திலீடுபடப் போவதாக அறிவித்துள்ளனர். (2-281)

# சுய தொழில்களை ஊக்குவிப்பதனூடாக மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும்

## டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு

(வவுனியா)

சுயதொழில் துறைகளை வளர்த்தெடுப்பதனூடாகவே மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும். அதற்கேற்றவகையில் மக்கள் துறைசார்ந்த தொழில் துறைகளை இனங்கண்டு கொள்ள வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட டக்ளஸ் தேவானந்தா அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

அவர் மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில், மக்களின் பொருளாதார மேம்பாடு என்பது அவர்கள் சார்ந்து வாழுகின்ற கிராமங்களின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் மூலமே மேம்பாடு கண்டு வருகின்றது. கிராமங்களில் கிடைக்கின்ற உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி அவற்றை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்திகளை மேற்கொண்டு சிறந்த முடிவுப்பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும்.



இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தைவாய்ப்பை பெற்றுக்கொள்ளும் போது அதனூடாகக் கிடைக்கப்பெறும் வருமானம் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அமையும்.

எனவே சுயதொழில்வாய்ப்புக்களை பலப்படுத்தி,வளப்படுத்தி கிராமங்களினதும் மக்களினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் நாம் தொடர்ந்தும் அயராது பங்களிப்பை வழங்க தயாராக இருக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாக செயலாளர் திலீபன், கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர். (2)







வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் க.வ.கமலேஸ்வரனின் 2017 ஆம் ஆண்டுக்கான CBG ஒதுக்கீட்டின் கீழ் மு/தென்னியன்குளம் அ.த.க பாடசாலைக்கு மேலைத்தேய வாத்திய கருவி பாண்செட் கடந்த 12ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டதை படங்களில் காணலாம். (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அரச ஓய்வூதியர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை 17 ஆம் திகதி செவ்வாயக்கிழமை காலை 9 மணிக்கு அரச ஓய்வூதியர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறும் இதில் கிளிநொச்சி மாவ்ட்டத்தைச் சேர்ந்த 40 சிரேஷ்ட ஓய்வூதியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய பூநகரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 5 பேரும் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த7 பேரும், பளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 5 பேரும் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 23 பேரும் மொத்தமாக 40 பேர் கௌரவிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் நலன்புரிசங்கச் செயலாளர் திருமதி. நா. யோகராணி அறிவித்துள்ளார். (2-84)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள்,வாசகர்களுக்கு போட்டிகள்

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபரை முன்னிட்டு பூநகரி பிரதேச சபை பொது நூலகம், பூநகரி பிரதேச வாசகர் வட்டம் ஆகியன இணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இதன் ஓர் அம்சமாக பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் ஆகியோருக்கு பல்வேறு போட்டி நிகழ்வுகளை நடத்த இருப்பதாக பூநகரி பிரதேச சபை பொது நூலக நூலகர் அறிவித்துள்ளார். இதன் வரிசையில் சிறுவர்களுக்கான கதை கூறல், கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டி, சுவரொட்டிப் போட்டி, வாசிப்பு, கிரகித்தல் போட்டி ஆகியவை நடைபெறவுள்ளது. தேசிய வாசிப்பு மாத சிறப்பு சஞ்சிகையானது பூங்கதிர் -5 வெளியீடும் இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வுடன் நடைபெறவுள்ளது.

போட்டிகளுக்கான ஆக்கங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் பொதுநூலக நூலகருடன் தொடர்பு கொண்டு அறிய முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# சிறுமியை வன்புணர்விற்கு முயன்ற நபர் கைதானார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயன்ற 48 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்கு பகுதியைச் சேர்ந்த சிறுமி (வயது 8) ஒருவர் கடை ஒன்றிற்கு மண்ணெண்ணெய்வாங்கச்சென்றுள்ளார்.

இந்நிலையில் கடையின் உரிமையாளர் மண்ணெண்ணெய் வீட்டில்தான் இருக்கின்றது என வீட்டிற்கு சிறுமியை அழைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்க முயன்றுள்ளார்.

எனினும் குறித்த நபரிடம் இருந்து தப்பிய சிறுமி தனக்கு நடந்தவற்றை அவரது தாயாருக்கு தெரிவித்துள்ளார். தாயார் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தனது முறைப்பாட்டை தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் உடனடியாக குறித்த நபரை கைது செய்துள்ளார்கள்.

சிறுமி பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்க்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# மக்கள் அரங்க செயற்றிட்டம் 25பாடசாலைகளில் முன்னெடுப்பு

(மன்னார்)

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை மக்கள் அரங்க செயற்றிட்டம் மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 25 பாடசாலைகளில் இதுவரை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இச் செயற்றிட்டத்தின் ஊடாக சுமார் 14 ஆயிரம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பயனடைந்துள்ளனர்.

இலங்கை மக்கள் அரங்கச் செயற்றிட்டமானது சிறுவர்களையும் இளைஞர்களையும் ஆரம்பப் பயனாளிகளாகக் கருதிச் செயலாற்றுகின்றது.

அந்தவகையில் இலங்கை மக்கள் அரங்கச் செயற்றிட்டத்தின் நான்காம் கட்டமானது இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தினால் அமுல்படுத்தப்பட்டது.

வயது வந்தோர், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் (16-19 வயதுடையோர்) ஆகியோருக்கு மத்தியில் அகிம்சைக் கலாசாரத்தினையும் சகிப்புத்தன்மை வேற்றுமைகளை ஏற்றுக்கொள்ளல், வேறுபாடுகளுக்கு மதிப்பளித்தல், சமத்துவம், நீதி, சமூகப் பிரச்சினைகளைக் கையாளுதல், வன்முறையற்ற விதத்தில் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் போன்ற பன்மைத்துவ விழுமியங்களையும் ஊக்குவிப்பதை இது குறிக்கோளாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகிறது.

மக்கள் அரங்கச் செயற்பாடுகளை செயலாற்றுகை செய்வதற்கென சுமார் 48 இளம் மக்கள் அரங்கக் கலைஞர்கள் (ஆண்கள்: 32 பெண்கள் 16) பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் அரங்க செயற்றிட்டத்திற்கான உத்தியோக பூர்வ கையேடு ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளதாக [illegible] தெரிவித்துள்ளனர். (2-28)

# பூநகரி கலாசார பேரவை பொதுக்கூட்டம் இன்று

(பூநகரி)

பூநகரி கலாசார பேரவையின் விசேட பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பொதுக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்கள், கலைஞர்கள் ஆகியோரை சமுகமளிக்குமாறு பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்ணேந்திரன் கேட்டுள்ளார்.

இக் கூட்டம் கடந்த 13 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)



மன்னார் கௌரியம்பாள் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஜப்பான் நாட்டு அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் கடந்த 9 ஆம் திகதி வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி [illegible] யு.என்.ஹபிராட் நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டராசிரியர் நியமன முறைகேடு

# வடமாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு மனிதவுரிமை ஆணைக்குழு விளக்கம் கோரி கடிதம்

(குருமன்காடு)

தொண்டராசிரியர் நியமன நேர்முகத் தேர்வில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதி பிரதம செயலாளர் ஆகியோரிடம் விளக்கம் கோரி அவசர கடிதம் ஒன்றினை நேற்று முன்தினம் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வடக்கு மாகாணத்தில் கடந்த பல வருடங்களாக தொண்டராசிரியர்களாக கடமையாற்றி வந்தவர்களை ஆசிரிய சேவையில் உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றிருந்தன. இந் நேர்முகத் தேர்வில் ஆயிரத்து 46 பேர் தோற்றியிருந்த நிலையில் 676 பேர் நியமனம் பெற தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டு. அந்நியமனத்திற்கான மத்திய அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்தது. இந் நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 182 பேரே தகுதி பெற்றுள்ளதாக தெரிவித்து அவர்களை நிரந்தர நியமனத்தில் உள்ளீர்ப்பதற்காக பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டன.

நேர்முகத் தேர்வில் கேட்கப்பட்ட தகுதிகள், ஆவணங்கள் இருந்தும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த 25 தொண்டராசியர்கள் கடந்த 6 ஆம் திகதி வவுனியா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் தாம் புறக்கணிக்கப்பட்டமைக்கான காரணத்தை கோரியும், தம்மையும் உள்ளீர்க்குமாறு தெரிவித்தும் முறைப்பாடு செய்திருந்தனர். இம்முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனிதவுரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பில் விளக்கம் கோரி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதி பிரதம செயலாளர் ஆகி யோருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அவசரமானது என தலைப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு மாகாண தொண்டராசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றதாக தெரிவித்து பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் சார்பில் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித வுரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழாகவும், மற்றும் 2005/17 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரமும் இம்முறைப்பாடு தொடர்பில் தாங்கள் பூரணமான விசாரணை ஒன்றினை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையினை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக் கடிதத்துடன் முறைப் பாட்டாளர்கள் 25 பேரின் பெயர் விபரங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (2-250)



# மாணவர்களுக்கு சைவநெறிப் போட்டி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு வவுனியாவில் அமைந்துள்ள நாவலர் அறநெறிப் பாடசாலையானது வவுனியா நகரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சைவநெறிப் போட்டி [illegible]ன்றை எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு நடத்தவுள்ளோம்.

எனவே இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கும்படி அறநெறிப் பொறுப்பாசிரியர் ஆ. கோணேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். மேலதிக விபரங்களுக்கு பரீட்சை ஒழுங்கமைப்பு பிரிவு 077 069 1582 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# சிறுமியை கடத்த முயன்ற வேளை தந்தை விழிப்படைந்து விரட்டியடிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் சிறுமியை கடத்திச்செல்ல முயற்சித்த வேளை தந்தை விழிப்படைந்த காரணத்தினால் கடத்தல்காரன் தப்பியோடியுள்ளனர்.

வவுனியா நெடுங்கேணி கீரிசுட்டான் கிராமத்தில் 10வயது சிறுமியை கடந்த 12 ஆம் திகதி கடத்தி செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது.

ஒலுமடு வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் 10 வயது சிறுமியை நடுநிசியில் வீட்டுக்குள் நுழைந்து மர்ம நபரொருவர் கடத்திச் செல்ல முயற்சித்தவேளை வீட்டுக்கு வெளியே உறக்கத்தில் இருந்த தந்தையார் மர்ம நபரை விரட்டிச்சென்ற நிலையில் குறித்த நபர் சிறுமியை விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம்குறித்து நெடுங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட நிலையில் சம்பவம் இடம் பெற்ற வீட்டிற்கு சென்ற பொலிஸார் தேடுதல் மேற்கொண்டதுடன் சந்தேக நபர் என சந்தேகப்படும் ஒருவரின் செருப்பை கைப்பற்றியுள்ளதுடன்.விரிவான விசாரணை களை மேற்கொண்டுள்ளனர்.

பிரஸ்தாப சிறுமி கடந்த ஒருவருடத்திற்கு முன் 60 வயதுடைய நபர் ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையில் குறித்த நபருக்கு நீதிமன்றம் பிணைவழங்க மறுத்துவருவதுடன் தொடர்ந்து சந்தேக நபர் சிறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதானது பெற்றோரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. (2-250)

# சட்டவிரோதமாக ஆற்றுமணல் ஏற்றி பயணித்த வாகனங்கள் மாட்டின



(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள பிரமந்தனாறு ஆற்று பகுதியில் இருந்து அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரம் ஒன்றையும். பாரவூர்திகள் 02 என்பனவற்றுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் மூன்று பேரும் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். ஜீ. விமல குணரட்ண வின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸார் திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்ட போதே அனுமதிப் பத்திரத்திற்கு முரணா வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம், பாரவூர்திகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் மூன்று பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் பாரப்படுத்தப்படவுள்ளதுடன் சந்தேக நபர்களை முற்படுத்தவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கல்லிருப்புக்குளப் புனரமைப்பு பணி மந்தகதி; அணைக்கட்டின் நடுப்பகுதி வெட்டி நீர் வெளியேற்றம்




(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கல்லிருப்புக் குளப் புனரமைப்பு வேலைகள் மந்த கதியில் நடைபெற்று வரும் நிலையில் குளத்தில் சேர்ந்த 3. அடி நீரை குள புனரமைப்பு ஒப்பந்தகாரர்கள் அணைக்கட்டின் நடுப்பகுதியை வெட்டி நீரை வெளியேற்றிவருவதாக விவசாயிகள் தமது ஆதங்கத்தையும், கவலையையும் தெரிவித்துள்ளார் கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக கல்லிருப்புக் குளம் புனரமைப்பு வேலைகளுக்காக கேள்வி கோரல்கள் நடைபெற்று பொருத்தமான ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்பட்ட நிலையில். வேலையைப்பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் துரிதமாக புனரமைப்பு வேலைகளைச் செய்யாது காலத்தை இழுத்தடித்து வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில். அண்மையில் கிடைத்த மழை வீழ்ச்சி காரணமாக குளத்தில் 3. அடி நீர் வரத்து கிடைத்த போது அதனை ஒப்பந்தகாரர்கள் குளவண்டை ஊடறுத்து வெட்டி நீரை வெளியேற்றி வருகின்றனர்.

இதனால், நடப்பாண்டில் காலபோக நெற் செய்கையை மேற்கொள்வதற்காக விவசாயிகள் ஆர்வத்துடன் தயாராக இருந்த நிலையில் நீர் வெளியேற்றப்பட்டமை விவசாயிகள் மத்தியில் பெரும்மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் கூடிய கவனம் எடுத்து மிக விரைவாக குளப் புனரமைப்பு பணிகள் நடைபெற நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-15)

# வாகன விபத்தில் இருவர் காயம்



(மல்லாவி)

வவுனியா - ஈரட்டை பெரிய குளத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம். வீதியை விட்டு விலகி மதகுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் வாகனத்தின் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சாரதியின் நித்திரை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஈரட்டைபெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)







மு/கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலையின் முதியோர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கௌரவிப்பும் கலைவிழா என்பன பாடசாலை வளாகத்தில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் திருமதி யோ.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2017-16.11.2017



அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லும் மேஷ இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். செவ்வாய் உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்திற்கு அதிபதியாவார். 8ஆம் இடத்திற்கு அதிபதி 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, சில நல்ல வாய்ப்புகள் நாடிவரும். நீண்ட நாட்களாக முடிவடையாமல் இருந்த ஒரு காரியம், இப்பொழுது தானாக முடிவடையப் போகிறது.

முயற்சி எடுக்காமலேயே பல காரியங் கள் முடிவடையும் நேரம் இது. குறிப்பாக எதிர்ப்பு, வியாதி, கடன் என்று வர்ணிக்கப்படும் இடமான 6ஆம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், எதிரிகள் விலகுவார்கள். வியாபாரப் போட்டிகள் அகலும்.

உங்களோடு கூட்டுத்தொழில் செய்பவர்கள், விலகிக்கொள்ளலாம் என்று இதுவரை நினைத்திருக்கலாம். ஆனால் இப்போது அவர்கள் தங்களின் கருத்தை மாற்றிக் கொண்டு உங்களுடனேயே தொழில் செய்வார்கள். அடிக்கடி ஆரோக்கியப் பாதிப்புகளில் சிக்கித் தவித்த நீங்கள், இனி அனுதினமும் உற்சாகத்தோடு செயல்படப் போகிறீர்கள்.

என்னதான் நமது முயற்சிகள் ஒருபுறம் இருந்தாலும், அதை வெற்றிபெறச் செய்ய இறையருளும் தேவை. அந்த இறையருளை முறையாக நீங்கள் பெற, உங்கள் சுய ஜாதகத்தை ஒருமுறை புரட்டிப் பாருங்கள். அதில் செவ்வாய், சனி, ராகு-கேதுக்களின் தசாபுத்திகள் நடைபெற்றால், விரயங்கள் கூடுதலாக இருக்கும். மனக்குழப்பம் அதிகரிக் கும். இதுபோன்ற நிலை மாறுவதற்காகத் தான் பரிகாரங்கள் செய்வது என்பதை அறி ந்து கொள்ளுங்கள். தொழிலில் முதலீடு செய்வதற்காகவோ அல்லது இடம், பூமி வாங்குவதற்காகவோ வங்கியை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு, வங்கியில் இருந்து பணம் வந்து சேரக்கூடும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது ஓரளவு குறைந்திருக்கிறது. என்றாலும் அது விலகும் வரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பதே நல்லது. டிசம்பர் 19 ஆம் திகதி சனி விலகப் போகிறது. அதுவரை ஒவ்வொரு சனிக்கிழமையும் ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அணிவித்து வழிபாடு செய்யலாம். அனுமன் வழிபாடு அல்லல்களைப் போக்கும். மாதத் தொடக்கத்தில் தீபாவளித் திருநாள் வருகிறது. அன்றைய தினம் உங்களுக்குரிய அதிர்ஷ்ட வண்

### புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

ணத்தில் ஆடை எடுத்து, குடும்பப் பெரியவர்களின் ஆசியுடன்அதைவாங்கிஅணிந்துகொண்டு ஆலய வழிபாட்டை மேற் கொள்ளுங்கள்.

குருவின் பார்வை

உங்கள் இராசியில் பதிவதால், வியாழக்கிழமைதோறும்குருவை வழிபட்டு வந்தால் வெற்றிகளை வரவழைத்துக்கொள்ள இயலும்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

ஒக்டோபர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3,6-க்கு அதிபதியான புதன், அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும். எதை எந்த நேரத்தில்செய்ய வேண்டும்என்று நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் கச்சிதமாக செய்து முடிப்பீர்கள். தொழிலில் இருந்து வந்த தொல்லைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வருமானம் எதிர்பார்த்ததை விட அதிகமாகும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். கரைந்த சேமிப்பை ஈடுகட்டுவீர்கள்.




சுக்ர பெயர்ச்சிக் காலம்

இதுவரை கன்னி இராசியில் நீச்சம் பெற்றிருந்த சுக்ரன், துலாம் இராசிக்கு நவம்பர் 3ஆம் திகதி வருகிறார். துலாம் இராசி, சுக்ரனுக்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்திற்கும், 2ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் சுக்ரன். அவர் தனது சொந்த வீட்டில் சஞ்சரிக்கும்பொழுது, கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடல் தாண்டிச் செல்லும் முயற்சியும் அனுகூலமாக அமையும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

குடும்பத்தில் இருந்த பிரச்சி னைகள் நல்ல முடிவிற்கு வரும். இம்மாத செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. சஷ்டி விரதமிருப்பதன் மூலம் சகல பாக்கியங்களையும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள் பலன்கள்!

மேஷ இராசியில் பிறந்த பெண்களுக்கு, எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும் மாதம் இது. உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணம றிந்து செயற்படுவர். பெற்றோர்களின் பாசம் கூடுதலாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் உருவாவதற்கான அறிகுறிகள் தென்படும். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



உழைத்தால் உயர்வு கிடைக்கும் என்று சொல்லும் ரிஷப இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் நீச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு சந்தி ரன், செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்க ளும் இணைந்து சந்திர- மங்கள யோக த்தை உருவாக்குகிறார்கள். எனவே சுப விரயங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை ஓரளவு குறையும். குடும்பத்தினரின் தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்ய ஒரு பெரும் தொகையைச் செலவிடும் சூழ்நிலை மாதத் தொடக்கத் திலேயே உருவாகும்.

உடன்பிறப்புகளோடு கூட்டுத் தொழில் வைத்திருப்போர், அதிலிருந்து விடுபட நேரிடும். உடன் பிறப்புகள் தம் பங்கைப் பிரித்துக் கொடுக்கச் சொல்லி வற்புறுத் துவர். கொடுக்கல்- வாங்கல்களை ஒழு ங்கு செய்துகொள்ள போதுமான தொகை இல்லையே என்ற சொத்துகளை விற்க க்கூடிய சூழ்நிலை கூட ஒருசிலருக்கு ஏற்படலாம்.

குரு பகவான் 6இல் சஞ்சரிக்கிறார். '6இல் குரு வந்தால் ஊரில் பகை உருவாகும்' என்பார்கள். எனவே அடுத்த வீடு, பக்கத்து வீட்டாருடன் இல்லாமல் அண்டி வந்தவர் களுடனும் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அதே நேரத்தில் குருவி னுடைய பார்வை உங்களுடைய இராசிக்கு 12ஆம் இடமான விரய ஸ்தானத்திலும் பதிகின்றது. வாக்கு, தனம், குடு ம்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான இரண்டாம் இடத்திலும் பதிகிறது. எனவே கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். குழப்பங்கள் அகலும். வருமானம் திருப்திகரமாக இருக் கும். தேங்கிய காரியங்கள் ஒவ்வொன்றாகநடைபெறும். சில்லறை கடன்களில் இருந்து விடுபடுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும்.

வெளிநாட்டிற்குச் சென்று உத்தியோகம் பார்க்க ஆசைப்பட்டவர்கள், அதற்காக ஏதே னும் முயற்சிகள் செய்திருந்தால் அது கைகூடும் நேரம் இது. சனியின் ஆதிக்கம் மட்டும் கொஞ்சம் வலுவாக இருக்கிறது. சப்தம ஸ்தானத்தில் சனி உலா வரும் பொழுது எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. முதல் முயற்சி உங்களுக்கு பலன் தராவிட்டாலும், அடுத்த முயற்சி நல்ல பலனைத் தரும்.

இம்மாதம் தொடக்க நாளிலேயே தீபாவளித் திருநாள் வருகி றது. அன்றைய தினம் அதிர்ஷ்டம் தரும் ஆடைகளை அணிந்து கொண்டு, அருகில் இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வாருங்கள். பிறகு தீபாவளியைச் சிறப்பாக கொண்டாடுங்கள். வியாழக்கிழமை தோறும் குருவையும், வெள்ளிக் கிழமை தோறும் அம் பாளையும்வழிபடுங்கள்.

### துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்!

வெற்றியை வழங்கும் விருச்சிக புதன்

ஒக்டோபர் 28ஆம் திகதி விருச்சிக த்திற்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு2,5ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது, சகல நன்மைகளையும் வழங்குவார். குறிப்பாக பணத்தேவைகள் உடனுக் குடன் பூர்த்தியாகும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்க சப்புகள் மாறும். வங்கிச் சேமிப்பு உயரும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடவில்லையே என்று கவலைப்பட்டவர்க ளுக்கு, இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் நல்ல வரன்கள் வாசல் தேடி வரப் போகிறது.




சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி

நவம்பர் 3ஆம் திகதி துலாம் ராசிக்கு சுக்ரன் வரப்போகிறார். இதுவரை சுக்ரன் கன்னி இராசியில் நீச்சம் பெற்றிருந்தார். இப்பொழுது சொந்த வீட்டிற்கு வந்து பலம் பெறுகிறார். எனவே இனி உடல்நிலைத் தொல்லைகள் அகலும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். தங்கம், வெள்ளி, ஆடை-ஆபரண சேர்க்கை உண்டு. பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவோடு பதவி உயர்வு காண்பீர்கள். சுக்ர பலம் நன்றாக இருக்கும் பொழுது, அக்கறை செலுத்தாத காரியங் களில் கூட ஆதாயம் கிடைக்கும். எனவே இதுபோன்ற காலங்களில் தொழில் தொடர்பாக முயற்சிகளை எடுப்பது பல னைத் தரும். துணிவும், தன்னம்பி க்கையும் கூடும் நேரம் இது.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள் ளுங்கள். ஏகாதசி விரதமிருந்து பெருமாளை வழிபட்டால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

முற்பாதியைக் காட்டிலும் பிற்பாதி சிறப்பாக இருக்கும் மாதம் இது. முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க, முக்கியப்புள்ளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். விரயங்கள் கூடுதலாக இருந்தாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. வீடு மாற்றங்கள் உங்களுக்கு விரும்பும் விதத்தில் அமையும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை ஏற்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஒரு வரை ஒருவர் புரிந்து கொண்டு செயற் பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது. பிள் ளைகளின் எதிர்கால நலன்கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. அனுமன் வழிபாடும், பெருமாள், லட்சுமி வழிபாடும் பெருமை சேர்க்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இறுதி அரசன் கூட ஒரு தமிழன் தான் இதுதான் வரலாறு; தேவையற்ற முரண்பாடு வேண்டாம்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

இந்த நாட்டில் வாழும் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். கௌதம புத்தரும் இந்தியாவில் இருந்துதான் வந்தார். இலங்கையின் இறுதி அரசன் கூட ஒரு தமிழ் மகன். இதுதான் வரலாறு நாங்கள் தேவையற்ற சண்டைகளில் ஈடுபடவேண்டிய அவசியமே இல்லை என உயர்கல்வி மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மட்டக்களப்பு மண்டூர் குறுமண்வெளி பாலத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண மக்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம் கடந்த ஜனாதிபதி தேர்தலிலேயே அதிகூடிய வாக்குகளை மைத்திரிபால சிறிசேனவிற்கு வழங்கி வெற்றி பெற வைத்திருந்தீர்கள். இதற்காக எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களது ஆதரவு கிடைக்காமல் இருந்திருந்தால் இன்று இவ்வாறானதோர் நல்லாட்சி அரசாங்கம் மலர்ந்திருக்க முடியாது என்பதனை நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.

பலவருடங்களாக நாங்கள் பலதுன்பங்களை சந்தித்து இருந்தோம் தேவையற்ற யுத்தத்தினால். கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் பல பிழைகளை செய்துள்ளனர் என்பதனை நாங்கள் உணர்கின்றோம். தற்பொழுது நல்லாட்சி அரசில் இருக்கின்ற இந்த ஐக்கிய தேசிய கட்சியானது கடந்த கால அரசாங்கம் விட்ட பிழைகளை உணர்ந்து மக்களுக்கு சேவை செய்வதையே விரும்புகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள். அவர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதனை கூறிவைக்க விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் வாழும் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் இந்தியாவில் இருந்துதான் வந்திருக்கின்றனர். கௌதம புத்தரும் இந்தியாவில் இருந்துதான் வந்தார். இலங்கையின் இறுதி அரசன் கூட ஒரு தமிழ்மகன். எங்களது வரலாற்றினை நாங்கள் பார்ப்போமாக இருந்தால் நாங்கள் தேவையற்ற சண்டைகளில் ஈடுபட வேண்டிய அவசியமே இல்லை. துரதிர்ஷ்டவசமாக வரலாறு மறக்கப்பட்டு பாடசாலைகளில் கூட போதிக்க முடியாததொரு நிலையை நாங்கள் காண்கின்றோம்.

சில மக்களுக்கு 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரமும் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரமும் தான் தெரியும்.

சில மக்களுக்கு 1956 ஆம் ஆண்டு கலவரம் மாத்திரம்தான் தெரியும். இவ்வாறான வரலாறுகளை மாத்திரம்தான் தெரியும். ஆனால் ஆயிரம் ஆயிரம் காலம் இந்த நாட்டில் இருந்த வரலாறுகளை தெரிந்து கொள்வதற்கு நாங்கள் மறுக்கின்றோம்.

இலங்கையில் கண்டியை ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கிலும் கிழக்கிலும் மணமகளை பெற்றார்கள் என்ற வரலாறும் இருக்கின்றது.

இதுதான் இலங்கையின் உண்மை யான வரலாறு. இது சுவடிகளிலும் உள்ளது. எனவே ஐக்கிய தேசிய கட்சி இதனை நன்றாக புரிந்திருக்கின்றது. புதிய அரசாங்கம் 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிற்பாடு இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய வழிவகைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

கொழும்பில் இருந்து ஆட்சிசெய்த பல கட்சிகள் பல பிழைகளை செய்திருக்கின்றன. கடந்த காலங்களில் சிறிமாவோ பண்டாரநாயக்கா 1976 ஆம் ஆண்டு காலத்திலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினாலும் அரசியலமைப்புக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த அரசியலமைப்புக்கள் நடைபெறுகின்ற நேரத்திலே தமிழ் மக்களுடைய அபிலாசைகளை கருத்தில் எடுக்காமல் அதனை சேர்க்காமல் அந்த அரசியலமைப்புக்களை உருவாக்கியிருந்தார்கள்.

ஆனால் இந்த புதிய அரசாங்கமானது அரசியலமைப்பை உருவாக்குவதற்காக பல குழுக்களை அமைந்து அனைவரினது கருத்துக்களையும் உள்வாங்கி நல்லதொரு அரசியலமைப்பை உருவாக்குவதற்குரிய வேலைகளை மேற்கொண்டு வருகின்றது. முதன்முறையாக எல்லா ஜனநாயக கட்சிகளினதும், அனைத்து மக்களினதும், அனைத்து சிவில் சமூகங்களினதும் கருத்துக்களைப்பெற்று இந்த அரசியலமைப்பை உருவாக்க முயல்கின்றோம்.

இதன் அடிப்படையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இதுவரை 80க்கும் மேற்பட்ட அமர்வுகளிலே பங்கெடுத்து இருக்கின்றார். எனவே அவர்களின் கருத்துகளை உள்வாங்கித்தான் இந்த அரசியலமைப்பினை உருவாக்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றோம்.

இதன் அடிப்படையில் மக்களாகிய உங்களின் ஆதரவையும் இதற்காக நாடவுள்ளோம்.

இந்த நாட்டில் பொருளாதார ரீதியான யுகத்தை கட்டியெழுப்ப இருக்கின்றோம். கடந்த அரசாங்க காலத்திலே சர்வதேச ரீதியில் ஒதுக்கப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருந்தோம். எனவே புதிதாக உருவாக்கப்பட்ட இந்த நல்லாட்சி மூலம் சர்வதேச உலகத்தால் நல்லாட்சி அரசு நாகரிகமான அரசு என்ற நற்பெயருடன் அவர்களின் உதவியினைப்பெற்று நாங்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இருக்கின்றோம். வெளிநாடுகளில் இருந்து மூலதனங்களை மேற்கொள்வதற்காக இங்கு பலர் வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்திலே 300 அறைகளைக் கொண்ட 38 ஹோட்டல்கள் அமைத்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இது ஒரு ஆரம்பம்தான். அடுத்த மாதம் இந்தியாவின் பெருந்



தெருக்கள் அமைச்சர் எங்களை வந்து சந்திக்க இருக்கின்றார். அவர்கள் வடக்கு-கிழக்கில் உள்ள பெருந் தெருக்களை அமைத்து தருவதற்கு எண்ணியுள்ளனர்.

இதன் அடிப்படையில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு எங்களது முன்மொழிவுகளை ஒப்படைத்துள்ளோம். இந்த அடிப்படையில் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு வரையான அதிவேக நெடுஞ் சாலை ஒன்றை அமைப்பதென அம்முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி வடக்கில் யாழ்ப்பாணம்- மன்னார் பாதை, வவுனியா- திருகோணமலை பாதை என்பனவற்றையும் அமைப்பதற்கு எண்ணியுள்ளோம்.

அது மாத்திரமின்றி மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை, திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கரையோரமான புகையிரத பாதையையும் அமைக்க எண்ணியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வும் உணவுப் பொதிகள் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கிருஸ்ணர்நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கந்தையா கிருஷ்ணனின் 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வு மற்றும் உலர் உணவுப்பொதிகள் வழங்கலும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சட்டத்தரணி சிவ.ஜோதிலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார்.

மேலும் இந்நிகழ்வில் வறுமைக்கோட்டின் கீழுள்ள 100 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைத்தல் மற்றும் குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் வித்தியாலய நூலகத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ-10-136)

## கட்டடத்தில் தீ

(கொழும்பு)

புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக கட்டடத்தில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றது. இது குறித்த மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த கட்டடத்தில் சட்டத்தரணிகள் அலுவலகம் உள்ளிட்டவை இருந்ததாக தெரியவந்துள்ளது.

கொழும்பு நகர சபை தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987RC<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/7883 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 40 செவ் 1 இல்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>தொ.இ: G/7147 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 20செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7884 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம் செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7150 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7885 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 63 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7154 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:27சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BBA/அரசதொழில்<br>தொ.இ: B/7888 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Diploma, Reading Degree<br>தொ.இ: G/7159 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பெங்களூரில் 115 ஆண்டுக்குப்பின் வரலாறு காணாத மழை பெய்துள்ளது



(பெங்களூர்)

பெங்களூரில் 115 ஆண்டுக்குப்பின்பு வரலாறு காணாத மழைபெய்துள்ளதாகவானிலை மையம் தெரிவித்துள்ளது.

பருவநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக 2005 ஆம் ஆண்டுக்குப்பின் பெங்களூரில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இதனால் அங்கு கடுமையான குடிநீர் தட்டுப்பாடு நிலவியது. மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் வரட்சி நிலவியது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தொடங்கியதில் இருந்து பெங்களூரில் நல்ல மழை பெய்து வருகிறது. கடந்த 2 மாதமாக விட்டு விட்டு பலத்த மழை கொட்டுகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அங்கு வழக்கமான குளிர் நிலவுகிறது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை கொட்டியது. இரவு 7 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை விடாமல் கொட்டித் தீர்த்தது.

இதனால் நகரில் பல இடங்களில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆங்காங்கே மரங்களும், மின் கம்பங்களும் சாய்ந்து விழுந்தன. போக்கு வரத்தும் முடங்கியது.

இந்த மழைக்கு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், சுவர் இடிந்தும், கால்வாயில் விழுந்தும் 9 பேர் பலியானார்கள். குறிப்பாக பெங்களூரின் மேற்கு பகுதியில் கடுமையான சேதம் ஏற்பட்டது. வெள்ளப்பகுதிகளை அரசியல் கட்சி தலைவர்கள் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். பா.ஜனதா மாநில தலைவர் எடியூரப்பா, மத்திய அமைச்சர் சதானந்த கவுடா ஆகியோர் சுவர் இடிந்து பலியானவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

பலியானவர்களின் குடும்பத்துக்கு பா.ஜனதா சார்பில் தலா ரூ.ஒரு இலட்சமும் காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெங்களூரில் 115 ஆண் டுக்குப் பின்பு வரலாறு காணாத மழை பெய்துள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. ஒரே நாளில் 16.15 செ.மீ. மழை கொட்டியது. இதற்கு முன்பு 2005 ஆம் ஆண்டு 16.06 செ.மீ. மழை பெய்தது. இதுதான் அதிகபட்ச மழை அளவாக இருந்தது. (8)

## கௌரி லங்கேஷ் படுகொலை சந்தேக நபர்களின் உருவப்படத்தை வெளியிட்டது சிறப்பு புலனாய்வுக்குழு



(சென்னை)

கர்நாடகா பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் படுகொலையில் தொடர்புடையதாகக் கருதப்படும் சந்தேக நபர்களின் உருவப்படத்தை சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் வெளியிட்டனர்.

இது குறித்து பத்திரிகையாளர்களிடம் விளக்கிய சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவரும் பொலிஸ் ஐ.ஜி.யுமான பி.கே.சிங், "இரண்டு சந்தேக நபர்களின் மூன்று உருவ மாதிரிகளை வெளியிட்டிருக்கிறோம். நேரடி சாட்சியங்கள் அளித்த தகவலின் அடிப்படையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

குற்றவாளிகளுக்கு 23 இல் இருந்து 25 வயதே இருக்கும். சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவே அவர்கள் அங்கு வந்து தங்கியிருந்தனர். கௌரியின் வீட்டை அவர்கள் நோட்டமிட்டுள்ளனர்.

சிசிடிவி பதிவில் சந்தேக நபர் ஒருவர் இருசக்கர வாகனத்தில் செல்வது தெரிய வந்துள்ளது. இப்போது வெளியிடப்பட்டுள்ள உருவப்படத்தின் அடிப்படையில் சந்தேக நபர்கள் குறித்து துப்பு தருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்" என்றார்.

"லங்கேஷ் பத்ரிகே" என்ற பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் கௌரி லங்கேஷ் கடந்த செப்டெம்பர் 6 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். பல்வேறு பிரபல ஆங்கில நாளேடுகளில் பணியாற்றிய இவர் வகுப்பு வாதம், மதவாதத்துக்கு எதிராக செயற் பட்டவர். தொடர்ந்து பா.ஜ. வுக்கு எதிராகவும், இந்துத்துவவை எதிர்த்தும் பல்வேறு கட்டுரைகளை எழுதி வந்தார். இதனால் இந்துத்துவ அமைப்புகள் கௌரி லங்கேஷ் மீது அவதூறு வழக் குகளை தொடர்ந்தன.

குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற கலவரங்கள், இஷ்ரத் ஜஹான் உள் ளிட்ட? போலி என்கவுன்டர்கள் குறித்து ராணா அய்யூப் எழுதிய புத்தகமான "குஜ ராத் ஃபைல்ஸ்" நூலை கன்னடத்தில் மொழி பெயர்த்தார்.

அச்சமின்றி இடைவிடாது பத்திரிகைப் பணியில் இயங்கிக் கொண்டிருந்த கௌரி லங்கேஷை அவரது வீட்டு வாசலில் நான்கு மர்ம நபர்கள் சுட்டுக் கொன்றனர். (8)

## அமெரிக்காவில் மீண்டுமொரு துப்பாக்கிச்சூடு

அமெரிக்காவின் வேர்ஜினியா மாகாணத்தில் செயற்பட்டு வரும் வேர்ஜினியா பல்கலைக்கழகத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று இரவு 8:25 மணியளவில் திடீர் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது. இச் சம்பவத்தில் ஒருவர் காயம் அடைந்துள்ளார். ஆனால் உயிருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என அவரை பரிசோதித்த வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது. சமீபத்தில் லாஸ் வேகாஸ் நகரத்தில் இசை நிகழ்ச்சியின் போது நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் நினைவு மறைவதற்குள் மீண்டும் அதேபோன்ற ஒரு சம்பவம் நடந்துள்ளது அமெரிக்கர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. (8)

## வடகொரிய ஜனாதிபதியுடன் மோடி[...] சர்வாதிகாரியாக சித்திரிக்கும் [...]

## பரபரப்பானது உத்தர பிரதேசம்

(லக்னோ)

பணமதிப்பு நீக்கத்தால் உத்தர பிரதேச மாநில வர்த்தகர்கள், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னுடன் பிரதமர் நரேந்திரே மோடியை ஒப்பிட்டு சர்வாதிகாரி போல் போஸ்டரை வெளியிட்ட சம்பவம்பரபரப்பை ஏற்படுத்தியது.




பிரதமர் நரேந்திர மோடி கட ந்த ஆண்டு நவம்பர் 8 ஆம் திகதி உயர் மதிப்பிலான ரூ.500, ரூ. 1000 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். அதற்கு பதிலாக புதிய 500 ரூபாய், 2000 ரூபாய் நோட்டுகள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டன.

அத்தோடு கடந்த ஜுலை முதலாம் திகதி முதல் ஜி.எஸ்.டி. வரியை அமுல்படுத்தினார். பண மதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி.யால் இந்திய பொருளாதாரம் மேலும் சரிவை சந்தித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்தது. பண மதிப்பு நீக்கத்தால் சிறு தொழில்கள் நலிந்தன. வர்த்தகர்கள் பெறும் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் உத்தர பிர தேசத்தில் வடகொரியாவின் சர்வாதிகாரியான ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னுடன் ஒப்பிட்டு பிரத மர்

## கருகுகின்றது கலிபோர்னியா

### 6 நாட்களாகியும் அணையவில்லை காட்டுத்தீ

கலிபோர்னியாவில் ஆறு நாட்களாக கொழுந்து விட்டு எரியும் காட்டுத் தீயில் சிக்கி 40 பேர் இறந்துள்ளனர், நூற்றுக்கணக்கானோர்காணாமல் போயுள்ளனர். இந்த காட்டுத் தீ, கிராமப்புற பகுதிகளை தீக்கிரையாக்கியதில், ஆயிரக்கணக்கான வீடுகள் அழிந்துள்ளன.

இதுகுறித்து கருத்து தெரிவித்த கலிபோர்னியா மாகாண ஆளுநர், இந்த மாகாணம் இதுவரை சந்தித்திராத மோசமான பேரழிவு என்று வர்ணித்தார். இன்னும் 16 இடங்களில் எரிந்து கொண்டிருக்கும் தீயை அணைக்கும் பணியில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுப்பட்டுள்ளனர்.

மணிக்கு 70 கி.மீ வேகத்தில் காற்று வீசுவதால், இன்னும் பல பேரை அந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

மோசமான பாதிப்புக்குஉள்ளான சொனொமா ஒயின் பகுதியில் இருக்கும் சாண்டா ரோசாவில் மட்டும், கடந்த சனிக்கிழமை மூன்றாயிரம் பேர் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியை பார்வையிட்ட கலிபோர்னியா மாகாண ஆளுநர் ஜெர்ரி பிரவுன் "நம்பமுடியாத பேரழிவு. இது யாரும் கற்பனை செய்யாத திகிலூட்டும் நிகழ்வு" என கூறினார். அம் மாகாண வரலாற்றில் தான் மோசமான உயிரைக் கொல் காட்டுத்தீ. இக் காட்டுத்தீயினால் ஏறத்தாழ 100,000 பேர் வேறு பாதுகா இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன பகுதிகள் வெறும் சாம்பலாக மாறியுள்

தீப்பற்றிய இப் பகுதியிலிரு 50 தொலைவில் இருக்கும், சான் ப்ரா கோவும் புகை சூழ்ந்து, நகரம் முழு சாம்பல் படிந்துள்ளது. நாபா பள்ளத்த இருக்கும் 13 ஒயின் தொழிற்சாலைகள் காட்டுத்தீயினால் எரிந்துள்ளன.



## ஐ.எஸ்ஸின் பிடியிலிருந்த அல்-மயாடீன் நகரமும் மீட்பு



(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் கிழக்கு பகுதியில் ஈராக் எல்லையோரத்தில் உள்ள அல்-மயாடீன் நகரத்தை ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து மீட்டுள்ளதாக கூட்டுப்படைகள்தெரிவித்துள்ளன.

சிரியா நாட்டில் ரக்கா நகரில் இருந்து அடித்து விரட்டப்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் கடைசி நகரமான மயாடீன் நகரை கைப்பற்ற அமெரிக்காவின் ஆதரவுடன் அந்நாட்டின் அரசுப் படைகள் உச்சகட்ட தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களுக்கு துணையாக ரஷ்ய நாட்டின் போர் விமானங்களும் வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இந்நிலையில், ஈராக் நாட்டின் எல்லையோர நகரமான டேயர் அல்ஸோர் மாகாணத்தின் அருகேயுள்ள மயாடீன் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து மீட்டுள்ளதாக கூட்டுப் படைகளின் செய்தி தொடர்பாளர் ரியான் டில்லர் தெரிவித்துள்ளார். (8)

## அமெரிக்கா-பாகி[...] உண்மையான உற[...]

### ட்ரம்பின் திடீர் காதல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவிடம் இருந்து நிறைய ஆதாயங்களை அடைந்த பாகிஸ்தானுடன் உண்மையான உறவு தற்போதுதான் அரும்பத் தொடங்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவை சேர்ந்த ஜோசுவா பாயல் என்பவர் அமெரிக்காவை சேர்ந்த கெயித்லான் கோல்மேனை திருமணம் செய்திருந்தார். இவர்கள் கடந்த 2012ஆம் ஆண்டு [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



...யை ஒப்பிட்டு
...போஸ்டர்கள்

மோடியின் போஸ்டர் ஒட்டப் பட்டுள்ளது. அந்த போஸ்டரில் ஒரு புறத்தில் கிம் படமும், மற்றொரு புறத்தில் மோடியின் படமும் இரு க்கிறது.

அந்த போஸ்டரில் உலகத்தை அழிக்காமல் ஓயமாட்டேன். வியாபாரத்தை அழிக்காமல் விட மாட்டேன் என்று சொல்வது போல் வாசகம் இடம் பெற்றுள்ளது. பண மதிப்பு நீக்கத்தினால் ஏற்பட்ட கடும் பாதிப்பால் ஆத்திரம் அடைந்த வர்த்தகர்கள் இந்த போஸ்டரை கான்பூர் நகரில் அச்சடித்து ஒட்டி யுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர். 22 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. 3 பிரிவுகளில் அவர்கள் மீது வழக்கு பாய்ந்துள்ளது. (8)

## மீண்டும் ஏவுகணை சோதனைக்கு தயாராகிறது வடகொரியா

### தென்கொரிய நாளிதழ் தகவல்

(சியோல்)

அமெரிக்கா - தென்கொரியா கடற்படை கூட்டுப் போர் பயிற்சிக்கு திகதி குறித்துள்ள நிலையில் மீண்டும் ஒரு சக்திவாய்ந்த ஏவுகணை பரிசோதனைக்கு வடகொரியா தயாராவதாக தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் அமெரிக்கா - தென்கொரியா கடற்படை வீரர்கள் அடுத்த வாரம் கூட்டுப் போர் பயிற்சிக்கு தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், மீண்டும் ஒரு சக்திவாய்ந்த ஏவுகணை பரிசோதனைக்கு வடகொரியா தயாராகி வருவதாக தென் கொரியா நாட்டு நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

வடகொரியா தலைநகர் பியாங்யாங் மற்றும் வடக்கு



போங்கியான் மாகாணங்களுக்கு ஏவுகணைகளை ஏவும் கவன்களை இரகசியமாக அனுப்பி வைக்கப்படும் செயற்கைக்கோள் படங்களுடன் இந்த செய்தி வெளியாகியுள்ளது.

தற்போது செலுத்தப்படும் ஏவுகணையானது, அமெரிக்காவின் அலாஸ்கா நகரம் வரை செல்லக்கூடிய ஹ்வாஸாங்-14 எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையாக இருக்கலாம்.

அல்லது, ஜப்பான் கடல் பகுதியில் குவாம் தீவில் உள்ள அமெரிக்க விமானப் படை த்ளத்தை தாக்கும் ஆற்றல்கொண்ட ஹ்வாஸாங்-12 ரக மத்தியரக ஏவுகணையாக இருக்கலாம். அல்லது, இவை இரண்டைவிட அதிக ஆற்றலுடன் அமெரிக்காவின் கடல் பகுதிவரை சென்று தாக்கக்கூடிய ஹ்வாஸாங்-12 என அந்த செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

கூட்டுப் போர்ப் பயிற்சிக்காக அணு ஆயுதங்களுடன் கூடிய அமெரிக்க நீர் மூழ்கி கப்பலான யூ.எஸ்.எஸ். மிச்சிகன் கடந்த வெள்ளிக்கிழமை தென்கொரியாவுக்கு வந்துள்ள நிலையில் வெளியாகியுள்ள இந்த தகவல் கொரிய தீபகற்பம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (8)

## 783 ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள தென்னாபிரிக்க ஜனாதிபதி

### உடன் விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு



(கேப்டவுடன்)

தென்னாபிரிக்க ஜனாதிபதியாக ஜேக்கப் ஷூமா மீது 783 ஊழல் புகார் விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்னாபிரிக்க ஜனாதிபதியாக ஜேக்கப் ஷூமா பதவி வகித்து வருகிறார். இவர் மீது 783 ஊழல் வழக்குகள் உள்ளன.

இராணுவத்துக்கு போர் விமானங்கள், ரோந்து படகுகள் மற்றும் ஆயுதங்கள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 1999ஆம் ஆண்டு பிரான்ஸை சேர்ந்த ஒரு நிறுவனத்திடம் இருந்து இவற்றை வாங்கியதாகவும், வர்த்தகர் ஷபீர் ஷாயிக்கிடம் இருந்து கமிஷன் பெற்றதாகவும் புகார் கூறப்பட்டது. இக குற்றச்சாட்டு கடந்த 2005 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு எதிர்க்கட்சிகளால் கிளப்பப்பட்டது.

இவை தவிர பண மோசடி பதவியை பயன்படுத்தி பலரை மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட வழக்குகளும் இவர் மீது உள்ளன. இந்த வழக்குகள் கீழ் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டன. ஆனால் அவை தள்ளுபடி செய்யப்பட்டன.

அதையடுத்துகடந்தஆண்டு எதிர்க்கட்சியான ஜனநாயக கூட்டணி ஜனாதிபதி ஜேக்கப் ஷூமா மீது உயர் நீதிமன்றில்மீண்டும்வழக்கு தொடர்ந்தது. அதில் அவர் இந்த வழக்குகளை எதிர்கொள்ள வேண்டும். அது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என தீர்ப்பு கூறியது.

அதை எதிர்த்து ஜனாதிபதி ஷூமா உச்சநீதிமன்றில் மேல் முறையீடு செய்தார். மனுவை விசாரித்த நீதிமன்றம் உயர் நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்தது. அதாவது ஷூமா மீதான 783 வழக்குகளையும் விசாரிக்கலாம் என உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பு தனக்கு ஏமாற்றம் அளித்துள்ளதாகவும், அதை எதிர்ப்பதாகவும் ஷூமா தெரிவித்துள்ளார். இவரது பதவிக் காலம் வருகிற 2019 ஆம் ஆண்டுடன் முடிகிறது. இவர் ஏற்கனவே 2 தடவை ஜனாதிபதி பதவி வகித்துள்ளார்.

எனவே அவர் இனி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. எனவே உச்ச நீதிமன்றின் இந்த தீர்ப்பு அவருக்கு மிக பின்னடைவாக கருதப்படுகிறது.' (8)

## அமெ.ஆளில்லா விமானத் தாக்குதலில் 14 ஐ.எஸ்.தீவிரவாதிகள் பலியாகினர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் 14 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆதரவு ஆட்சி நடந்து வருகிறது. இதை அகற்றுவதற்காக ஐ.எஸ். பயங்கரவாதிகள் தலைநகர் காபூலிலும், நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் அடிக்கடி வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தானை யொட்டி அமைந்த எல்லையோர மாகாணமான நங்கார்ஹரில் உள்ள அச்சின் மாவட்டத்தில் மோமண்ட் தாரா



என்னும் இடத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பூமிக்கு அடியில் பல அடி ஆழத்துக்கு சுரங்கம் அமைத்து ஆயுதங்களை குவித்து வைத்து தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் குனார் மாகாணத்தில் உள்ள சாவ்கே மாவட்டத்தில் நேற்று முன்தினம் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் குண்டு வீசி தாக்குதலை நிகழ்த்தின. இத் தாக்குதலில் 14 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (8)

## ...ஸ்தான் இடையே ...வு தொடங்குகிறது

...டு ஆப்கானிஸ்தானில் இருந்தபோது ...ன்கள் ஆதரவு பெற்ற ஹக்கானி தீவிர...ளால் கடத்தப்பட்டனர். அப்போது கெயித் ...கர்ப்பிணியாக இருந்தார்.

...த தம்பதியர் ஒரு இரகசிய இடத்தில் ...5 ஆண்டுகளாக பிணைக்கைதிகளாக சிறை...க்கப்பட்டு இருந்தனர். இடையில் அவர்...த 3 குழந்தைகளும் பிறந்தன. அவர்...மீட்க நடவடிக்கை எடுத்து வந்த அமெரிக்க...ளால், தம்பதியினர் சிறைவைக்கப்பட்டு... இடத்தை கண்டறிய முடியவில்லை.

...கூவா -கெயித்லான் தம்பதியையும், ...ளது 3 குழந்தைகளையும் கடந்த 11-...கதி குர்ரம் பள்ளத்தாக்கு வழியாக பாகிஸ்...குள் தீவிரவாதிகள் கொண்டு சென்றதை ...க்க உளவுத்துறை கண்டறிந்தது. உடனே ...றித்த விபரங்களை பாகிஸ்தானுக்கு தெரிவித்தது.

இதைத்தொடர்ந்து அதிரடியாக களத்தில் இறங்கிய பாகிஸ்தான் இராணுவத்தினர், தீவிரவாதிகளுடன் சண்டையிட்டு பாயல் குடும்பத்தினரை பத்திரமாக மீட்டனர். இந்த சம்பவத்தின் போது பாயலுக்கு லேசான காயம் ஏற்பட்டது. அவர்கள் பத்திரமாக கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தங்கள் நாட்டு குடி மக்களை பாகிஸ்தான் இராணுவம் மீட்டு இருப்பது அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதிலும் ஹக்கானி குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி பாகிஸ்தானை கடுமையாக கண்டித்து இருந்த ட்ரம்ப், இது ஒரு 'நேர்மறையான நடவடிக்கை' என பாராட்டினார்.

இந்நிலையில், பாகிஸ்தானை ட்ரம்ப் வானளாவ புகழ்ந்து தள்ளியுள்ளார். அமெரிக்காவுடன் பல்வேறு வகைகளில் பாகிஸ்தான் அளித்துவரும் ஒத்துழைப்புக்காக நன்றி தெரிவித்து கொள்வதாக குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், நமது நாட்டிடம் இருந்து பாகிஸ்தான் நிறைய ஆதாயங்களை அடைந்ததாக நான் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், பாகிஸ்தான் மற்றும் அந்நாட்டு தலைவர்களுடனான உண்மையான உறவு தற் போது தான் தொடங்கியுள்ளது. மற்ற நாடுகளைப்போல் பாகிஸ்தானும் அமெரிக்காவை மதிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (8)

## சோமாலியாவில் தீவிரவாதிகள் தாக்குதல்

### 20 பொதுமக்கள் பலி



(மொகாடிஷு)

சோமாலியா தலைநகர் மொகடிஷுவில்உள்ள ஹோட்டலை குறிவைத்து நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத்தாக்குதலில் 20 பேர் உயிரி ழந்தனர்.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டு தீவிரவாதிகளான அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன. சோமாலியா அரசை கவிழ்த்து விட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்ப டையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாகவுள்ளது.

உள்நாட்டு இராணுவ வீரர்கள் மீது அவ்வப்போது அதிரடியாக தாக்குதல் நடத்தி வரும் இத'தீவிரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர். மேலும், வெளிநாட்டினர் வந்து செல்லும் உணவகங்களை குறி வைத்தும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சோமாலியா நாட்டின் தலைநகர் மொகடிஷு நகரின் அருகே ஹோடான் மாவட்டத்தில் உள்ள ஒரு ஹோட்டலை குறி வைத்து தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 20 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இத்தாக்குதலின் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர் அல்லாதவரும் ஜனாதிபதியாகும் நிலைவரும்

## புதிய அரசியலமைப்பு குறித்து அமைச்சர் எரான் கருத்து



(கொழும்பு)

புதிய அரசமைப்பினால் இலங்கைபிளவுபடாது. ஆனால் சிங்களவர் அல்லாத ஒருவர் இந்நாட்டின் ஜனாதிபதியாகின்ற தருணம் வரும் என நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். "ஒவ்வொருவருக்கும் உரிய இடம் கிடைப்பதும் சகலரதும் உரிமைகளும் பாதுகாக்கப் படுவதுமான ஒரு நாட்டினை நாங்கள் உருவாக்குவோம். அந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உறுதியாகவுள்ளனர்.

வரலாற்றின் அடிப்படையில் பார்க்கின்ற போதும் வடக்கிலும் கிழக்கிலும் வேறுபட்ட தனித்தனி இராச்சியங்களாகவே எமது நாடு இருந்தது என்பதை அறிய முடிகின்றது. வெளிநாட்டவரின் வரவின் பின்புதான் ஒருமித்த தேசமாக மாற்றப்பட்டுள்ளது. அந்த வரலாறுகள் எவையும் இன்று கூறப்படுவதில்லை. போலியான வரலாறுகளே எடுத்துக் காட்டப்படுகின்றன. அதனால் புதிய அரசியலமைப்பிலும் நாம் பூகோள அடிப்படையிலான எந்த மாற்றங்களையும் ஏற்படுத்துவதில்லை என்பதே உண்மையாகும். அதேபோல் கடலின் ஒரு பகுதி நிரப்பப்பட்டாலும் கூட அதனை ஒருபோதும் தனித்த இராச்சியமாக மாற்ற முடி யாது.

ஜனாதிபதியின் கையெழுத்தினால் மாத்திரமே எமது நாட்டில் ஒரு தனி அலகை உருவாக்க முடியும் என்ற விடயங்களும்கூட புதிய அரசமைப்பில் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன கூறியுள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மலையகத்தில் அடை மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(கொழும்பு)

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா, ஹற்றன் உள்ளிட்ட பல பகுதிகளில் மண்சரிவு, வெள்ளப் பெருக்கு என்பனவும் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் மாலை 3 மணியளவில் நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரி பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவால் மூன்று மணித்தியாலங்கள் வரை நோட்டன் - ஹற்றன் மார்க்க பேருந்து போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

மாலை 6 மணி வரை நோட்டன் - ஒஸ்போன் மற்றும் லக்ஷபான பகுதிக்கான பேருந்து போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது.

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் மண் மேட்டை அப்புறப்படுத்தி பாதையை சீர் செய்த பின் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

மேலும், ஹற்றன் நகர பகுதியில் ஹற்றன் பொலிஸ் நிலைய விளையாட்டு மைதானம் மற்றும் தபாற் கந்தோர் வளாகம் ஆகியன நீரில் மூழ்கிய நிலையில், குடியிருப்பொன்று பகுதியளவில் சேதமானதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நாவலப்பிட்டி நகரின் தபாற் கந்தோர் வீதியும் நீரில் மூழ்கியதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## போர்க் குற்றம் குறித்த

# பசிலின் கருத்தால் கோத்தா சீற்றம்



(கொழும்பு)

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் களை இணைக்கும் வேலைத் திட்டத்தின் போது யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் போர்க்குற்றம் சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து குறித்து, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கடுமையாகச் சாடியுள்ளார்.

போருக்குப் பின்னர் பாதுகாப்புத்தரப்பினர் மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்படும் குற்றச் செயல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட பசில் ராஜபக்ஷ, அப்படியான சம்பவங்கள் நடந்திருப்பதாக கூறியிருந்தார். இது பாரதூரமான தவறு எனவும் இதன் மூலம் முன்னாள் ஜனாதிபதி உட்பட அனைவரது அரசியல் நடவடிக்கை களுக் கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்த விடயம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவின் நிலைப்பாட்டிலேயே இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பசில் ராஜபக்ஷவின் இந்த கருத்து காரணமாக தம்முடன் இருக்கும் சிங்கள தேசிய சக்திகளுக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த சக்திகள் தம்மிடம் இருந்து விலகிச் சென்றால் அதற்கு பசில் ராஜபக்ஷவே பொறுப்புக் கூற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்தை திருத்திக் கொள்ளுமாறு பசில் ராஜபக்ஷவிடம் ராஜபக்ஷ குடும்பத்தினர் கேட்டுள்ளனர். எனினும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை இரண்டு தரப்பிலும் மேற்கொள்ள வேண்டும் என்பதால், தான் கூறிய கருத்தை திருத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை என பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### நாம் ஆரம்பித்து வைப்போமே!

எங்க டிரைவர் சில சௌகரியங்களைப் பண்ணிக் குடுக்கச் சொன்னாரு. நான் முடியாதுன்னுட்டேன். ஒருநாள் கூட நேரத்துக்கு வர்றதில்லை. வண்டியை நீட்டா வச்சிருக்கிறதில்லை. அடிக்கடி லீவு வந்தால் காருகிட்டே ஆள் நிக்கிறதில்லை. இவரைத் தேட ஓர் ஆள் வேண்டியிருக்கு. நல்லா ஒத்துழைச்சா நான் நிச்சயம் கேட்டதெல்லாம் செய்து கொடுத்திருப்பேன் என்றார் என் நண்பர்.

அவர் கேட்ட சௌகரியங்களைப் பண்ணிக் கொடுத்துவிட்டு இந்த எதிர்ப்புக்களையெல்லாம் அவரிடம் சொல்லிப் பாருங்களேன் என்றேன்.

அதெப்படி நமக்கு ஒத்துழைப்புத் தராத ஆளுக்கு நாம் விட்டுக் கொடுக்கிறது?

முயற்சி செய்து தான் பாருங்களேன். எத்தனை நாளைக்கு இதே போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பீர்கள்? அவர் மாற வேண்டும்என எதிர்பார்க்காமல் நீங்கள் ஆரம்பித்து வையுங்கள் முதலில் என்றேன்.

அப்படியா சொல்றீங்க? அதையும் தான் பார்த்துக் கொள்வோமே என்றார். அப்படியே புரட்டிப் போட்டது போல் அந்த டிரைவர் இப்போது மிகவும் நல்லபடியாக நடந்து கொள்வதாகத் தெரிவிக்கிறார் நண்பர்.

பல மனைவிமார்கள் தங்கள் கணவர்கள் தங்களிடம் பிரியமாகவே நடந்து கொள்வதில்லை என்று புகார் செய்கிறார்கள். பல பேர் தங்கள் நண்பர்கள் தங்களிடம் உண்மையான நட்புணர்வுடன் நடந்து கொள்வதில்லை என்கிறார்கள். பல ஊழியர்கள் தங்களது சக ஊழியர்களால் மதிக்கப்படுவதில்லை என்கிறார்கள். இப்படியெல்லாம் விதவிதமாகப் புகார்கள்.

இந்த உலகம் என்பது கண்ணாடியைப் போன்றது. நாம் எப்படிக் கையையும் காலையும் ஆட்டுகிறோமோ அதே போல் அதுவும் ஆட்டுகிறது. நாம் உன் மூக்கை நறுக்கிவிடுவேன் என்பது போல் செய்து காண்பித்தால் அதுவும் அதே போல் செய்து காண்பிக்கின்றது. உண்மையைச் சொல்லப் போனால் இந்த உலகம் இன்னும் ஒரு படி மேலே போய் உன் தலையைச் சீவி விடுவேன் என்கிறது.

இப்படி இருக்கும் போது அவர்கள் பிரியமாக இல்லை. இவர்கள் மரியாதை தரவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை. நாம் யாரைக் குறை சொல்கிறோமோ அவர்களைப் பேசவிட்டால் அவர்கள் நமக்கு மேல் நம்மைப் பற்றிக் குறை சொல்லத் தயாராக இருக்கிறார்கள். காரணம் நம் குறைகள் நடக்குத் தெரிவதில்லை. நம்மைவிட அவர்கள் மீதே அதிகமான சதவிகிதம் தவ்று இருந்தாலும் பரவாயில்லை. முதல் மன மாற்றம் நம்மிலும் நிகழட்டும்.

சற்றே பெருந்தன்மையுடன் நடந்து கொண்டு அவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென எதிர்பார்க்கிறோமோ அதற்கான ஆரம்பப் பணிகளை நாமே தொடங்கி விடுவோம்.

என்னாகிவிட்டது இவருக்கு. முன்பு போல் இல்லையே இவர். நன்கு மாறி விட்டாரே நம் விடயத்தில் என்றெல்லாம் நன்கு வேறுபாடு தெரியும்படி சில சம்பவங்களை நாமே நிகழ்த்தி வைப்போம். அப்புறம் பாருங்களேன் அவை நிகழ்த்துகிற அற்புதங்களை.

**லேனா தமிழ்வாணன்**

# கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவையை ஆரம்பிக்க மீள விண்ணப்பங்கள் கோரல்



(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவையொன்றை ஆரம்பிக்க முதலீட்டாளர்களிடமிருந்து மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுமென துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் இந்தக் கப்பல் சேவையை நடத்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் அதற்கு போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காததால் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டால் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பொருளாதாரம், சுற்றுலா மற்றும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்களை அதிகரிக்க முடியுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(இ-7)

# மீனவர்கள் விவகாரம்; இந்திய-இலங்கை அமைச்சர்கள் சந்திப்பில் சுமந்திரனும் பங்கேற்பு

(டில்லி)

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக, இந்திய- இலங்கை அமைச்சர்கள் மட்டப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் டில்லியில் இடம்பெற்றன.

டில்லியில் கடந்த 13 ஆம் திகதி நடந்த மீன்பிடி தொடர்பான மூன்றாவது கூட்டுக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் இந்தப் பேச்சுக்கள் இடம் பெற்றன.

இந்தியத் தரப்பில் விவசாய மற்றும் விவசாயிகள் நலன்புரி அமைச்சர் இராதா மோகன் சிங் தலைமையிலான குழுவும், இலங்கை தரப்பில் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையிலான குழுவும் பேச்சுக்களில் பங்கேற்றது.





இந்தப் பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டார்.

மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் விவகாரம், ஆழ்கடல் மீன்பிடிக்கு மீனவர்களைத் தயார்படுத்தல், கடலடி மடிவலைகளைத் தடைசெய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது, விரிவாகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (இ-7)

# ஜனவரியில் உள்ளூராட்சித் தேர்தல் வெள்ளிக்குமுன் வேட்புமனுத் திகதி?

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனவரி மாதம் நடத்துவதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமர் எடுத்துள்ளனர்.

இதனடிப்படையில் இந்த வாரத்தில் மாநகர, நகர, பிரதேசசபை திருத்தச்சட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது. இந்நிலையில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக வேட்புமனுவுக்கான திகதியை அறிவிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரியில் உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி , பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியினர் தனித்தனியே கூட்டணி அமைத்து தேர்தலில் களமிறங்குவது குறித்து தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் மலையகம் , வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு பிரதான கட்சிகள் வியூகம் வகுத்து வருகின்றது. குறிப்பாக தமக்கு ஆதரவு வழங்கக்கூடிய தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டணியமைக்கும் முயற்சிகள் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கீழ் மட்டத்திலிருந்து மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கூட்டு எதிர்க்கட்சியில் செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களின் தொகுதி அமைப்பாளர்பதவிகள் அனைத்தும் பறிக்கப்பட்டு நம்பிக்கைக்குரியவரகள் மீள்நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திரக்கட்சியின்கோட்டை எனக் கருதக்கூடிய அத்தனகல்ல தேர்தல் தொகுதியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாக கருதப்படுகின்றது. அதே போன்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஊடாக ஆதரவு அளித்து வந்த அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மறு புறம் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் யானை சின்னத்தில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்காக குறித்த தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளது. ஆனால் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் இடம்பெறக் கூடிய கடின போட்டியில் கூடிய வாக்குகள் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கூடுதலான தொகுகளில் வெற்றி பெற வாய்ப்புகள் உள்ளன.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மலையகம் , வடக்கு மற்றும் கிழக்கில் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுதந்திர கட்சிக்கோ அல்லது மகிந்த அணிக்கோ தம்மை விட அதிக வாக்குகள் சென்றுவிடக் கூடாது என்பதில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றது.

ஆனால் தனக்குள்ள மக்கள் ஆதரவை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முழுமையாக பெற்று அரசாங்கத்துக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்ற கடினமான நிலைப்பாட்டுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர். முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வடக்குக்கு சென்றதும் மகிந்த ராஜபக்ஷ கிழக்குக்கு சென்றதும் இழந்த சிறுபான்மை மக்களின் ஆதரவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கத்திலேயேயாகும்.

குறிப்பாக கிழக்கில் புதிய கூட்டணிகளை உருவாக்கி அதனூடாக மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மகிந்த தரப்பால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் மாத்திரம் அல்ல ஏனைய அனைத்து தேர்தலிலும் இந்த ஆதரவை தக்கவைத்து கொள்ளும் ஒரு கீழ்மட்ட கட்டமைப்பை கூட்டு எதிர்க்கட்சியினர் உருவாக்கியுள்ளனர்.

அதேபோன்று பிரதான தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் தனித்தும் குறிப்பிட்ட சில பகுதிகளில் பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைத்தும் போட்டியிட திட்டமிட்டுள்ளன. வடக்குக்கு சென்று அடு த்த கட்ட அரசியல் செயற்பாடு களுக்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக பசில் ராஜபக்ஷ அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் எனவும் அறிய முடிகிறது. (இ-7)

# 'அரசை கவிழ்க்க புதுக்கூட்டு' மகிந்தானந்த தகவல்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாவலப்பிட்டி கட்சி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட எம்.பி மகிந்தானந்த அளுத்கமகே, தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எதிராக, புதியதொரு கூட்டணியை அமைக்கவுள்ளதாகவும் அதில், மக்கள் விடுதலை முன்னணியும் அங்கம் வகிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

புதிதாக உருவாக்கப்படவுள்ள இந்தக் கூட்டணியின் மூலம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு, தற்போதுள்ள அரசாங்கத்தை கவிழ்ப்பதையே நோக்கமாகக் கொள்ளப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

“புதிய கூட்டணிக்கு என்ன பெயர் மற்றும் என்ன சின்னம் என்பது தொடர்பாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடப்போவது உறுதி. ஒன்றிணைந்த எதிரணியின் ஆதரவுடன், இந்தக் கூட்டணி அமைக்கப்படும். மேலும், எமது கூட்டணியில் இணைந்து கொள்வதற்கு, ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுக்கப்படும்” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

“ஐ.தே.க - சு.க இணைந்த நல்லாட்சி அரசாங்கத்துடன் இணையவில்லை என்பதற்காக, சு.கவில், மிகவும் நல்ல அரசியல் அனுபவம் கொண்ட சிரேஷ்ட அங்கத்தவர்கள் நீக்கப்பட்டனர். ஐ.தே.கவுடன் இணைந்து நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கவுள்ளோம் என்பது தொடர்பான ஆணை கூட பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை” என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மட்டக்களப்பில் கவனயீர்ப்பு

(மட்டக்களப்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி, மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. இலங்கையிலுள்ள சிறைச் சாலைகளில் எதுவித விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடு தலை செய்யக் கோரி, வடக்கில் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




இதற்கு ஆதரவாக இந்த கவனயீர்ப்புப் போராட்டம் மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் த.சுரேஸ் தலைமையில் நடைபெற்றது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்தி அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல்கலாமின் பிறந்தநாள் நிகழ்வுகள் யாழில்



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான பாரத ரத்னா கலாநிதி ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் 86 ஆவது பிறந்ததின நினைவு நாள் நேற்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வின் ஆரம்பத்தில் யாழ்.பொது நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அப்துல்கலாமின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் யாழ். பொது நூலக மண்டபத்தில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியாவில் இருந்து வருகை தந்த கலைமாமணி சொல்வேந்தர் சுகி சிவம் கலந்து சிறப்பித்ததுடன், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மத குருக்கள், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்,பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஏ. நடராஜன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:சோபிகா)

## தங்காலையில் முகாமிட்டுள்ள மகிந்த அணி அம்பாந்தோட்டையில் இன்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்காலையில் முகாமிட்டுள்ளனர். கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்து பங்காளி கட்சிகளின் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மாஜன எக்சத் பெரமுனவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஜப்பான் விஜயத்தை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பியுள்ள மகிந்த ராஜபக்ஷ கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களை சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல் சூழலில் நல்லாட்சி அரசாங்கத்திற்கு கடினமாக நெருக்கடிகளை கொடுப்பதற்கான எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து நேற்றைய கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டது.

கூட்டு எதிர்க்கட்சியினர் மீதான தொடர் அடக்குமுறைகள் மற்றும் எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலான வலுவான கூட்டணி அமைத்தல் என்பன இச் சந்திப்பில் பேசப்பட்டதாக தெரியவருகிறது.

அதே போன்று தங்கல்லை சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் இன்று திங்கட்கிழமை அம்பாந்தோட்டை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் விடுதலையை வலியுறுத்து இன்று திங்கட்கிழமை அம்பாந்தோட்டையில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (இ-7)

## சர்வதேச சிறுவர், முதியோர் கௌரவிப்புவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

ஜே/106,107,109 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உதவியாளர்கள், நல்லூர் லயன்ஸ் கழகம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் கௌரவிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு செம்மணி வீதியிலுள்ள பரியோவான் யாக்கோப்பு பாலர்பாடசாலையில் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பொ.ஜெசிதரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன், சிறப்புவிருந்தினராக யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார், யாழ்.மாநகர சபை பிரதி ஆணையாளர் அ.சீராளன், யாழ்.மாவட்ட தாய் சேய் நல வைத்திய அதிகாரி கே.மகேந்திரன், யாழ்.மாவட்ட தொற்று நோயியல் வைத்திய அதிகாரி கோ.ரஜீப், யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.உமாசுதன், லயன்ஸ் கழக வலயத் தலைவர் இ.இராகினி, யாழ்.மாவட்ட சுகாதார கல்வி உத்தியோகத்தர் அ.ஸ்ரீகுமார் மற்றும் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் ந.சுகிர்தராஜ், கௌரவ விருந்தினராக ஜே/109 கிராம உத்தியோகத்தர் ஆர்.சந்திரகுமார், யாழ்.மாநகரசபை குடும்பநல மேற்பார்வை உத்தியோகத்தர் ஆர்.மகேந்திரராஜா மற்றும் யாழ்.மாநகரசபை பிரதம பொது சுகாதார பரிசோதகர் எஸ்.திவ்வியகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## 18 வயதுக்கு மேற்பட்டவர்களை வரிப்பொறுப்பு கண்காணிப்பு எல்லைக்குள் கொண்டுவர முடிவு

(கொழும்பு)

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அடுத்த ஆண்டு வரிப் பொறுப்பு கண்காணிப்பு எல்லைக்குள் கொண்டு வரப்படவுள்ளனர். அடுத்த இரண்டு ஆண்டுகளில் வருமான வரியை இரட்டிப்பாக்கும் புதிய திட்டத்துக்கமைய இந்த நடைமுறை கொண்டு வரப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள உள்நாட்டுஇறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நடுன் குருகே, "18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பற்றிய விபரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பேணவுள்ளது. அவர்களின் வங்கி பரிமாற்றங்கள், கொள்வனவுகள், கொடுப்பனவுகள் கண்காணிக்கப்படவுள்ளன.

இதற்காக, மோட்டார்போக்குவரத்து திணைக்களம், வங்கிகள், ஆட்பதிவுத்திணைக்களம், கடன் தகவல் பிரிவு, முதலீட்டுச் சபை உள்ளிட்ட 35இற்கு மேற்பட்ட அரச நிறுவனங்களுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இந்தக் கண்காணிப்புப் பொறிமுறைக்கு தேசிய அடையாள அட்டை இலக்கம், பெயர் மற்றும் முகவரி என்பன முக்கிய தகவலாகப் பயன்படுத்தப்படும்.

இந்த கண்காணிப்பு பொறிமுறையின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு, தாமாக முன்வந்து வருமான வரி செலுத்தாமல் உள்ளவர்களுக்கு தகவல்கள் பரிமாறப்படும்.

தற்போது அரசாங்கத்தின் வரி வருமானத்தில், 80 வீதம் மறைமுக வரிகள் மூலமே, கிடைக்கின்றன. இதனை 2020ஆம் ஆண்டில், 60 வீதமாக குறைத்து, நேரடி வரி வருமானத்தை 20 வீதத்தில் இருந்து 40 வீதமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது, 625 பில்லியன் ரூபாவாக உள்ள வரி வருமானத்தை, 2020இல், 1200 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன் மிகப் பெரிய தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்கள், ஆசிரியர்களை தாமாக வரி செலுத்த ஊக்குவிப்பது குறித்து அவர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. அவ்வாறு அவர்கள் தாமாக முன்வந்து வரி செலுத்தாவிடின், கண்காணிக்கப்பட்டு வரி செலுத்த கட்டாயப்படுத்தப்படுவார்கள்.

இதுபோன்ற கூட்டங்கள், நிபுணர்கள், வர்த்தகர்கள், இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கும் நடத்தப்படும் நாட்டில் பதிவு செய்யப்பட்ட 39 ஆயிரம் மருத்துவர்கள் உள்ளனர். ஆனால், 6000 பேர் தான் வரி செலுத்துகின்றனர். இதுபோல உயர் வருமானம் பெறுகின்ற துறைசார் வல்லுநர்கள் பெரும்பாலும் வரி செலுத்துவதில்லை.

புதிய பொறிமுறையின் கீழ் இந்த தவறுகள் சீர்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மண்மேடு சரிந்து விழுந்து வீடு சேதம்

(கொழும்பு)

ஹற்றன் - குடாகம பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. குறித்த வீட்டின் பின்புறத் திலுள்ள அறைகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு, அதிலிருந்த பொருட்களும் சேதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்த வர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த வீட்டில் இருந்த தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளையும் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கும் நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சட்டம்; பொருத்தமான பெண் வேட்பாளர்களை தேடி அலையும் அரசியல் கட்சிகள்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்த லில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக் களின் வேட்பாளர் பட்டியலில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக் கப்பட்டுள்ளதால், பிரதான அரசியல் கட்சிகள் பெண் வேட் பாளர்களைத் தேடி அலையத் தொடங்கியுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 335 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளில் தேர்தல்கள் ஆணைக்குழு இறங்கியுள்ளது.

புதிய உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களின் படி, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், குழுக் களின் பட்டியல் 25 வீதம் பெண் வேட்பாளர்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும்.

அத்துடன் புதிய தேர்தல் முறையின் படி, 60 வீதமான உறுப்பினர்கள் நேரடியாகவும், 40 வீதமான உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.


25 வீதம் பெண் வேட் பாளர்களை நிறுத்த வேண்டும் என்ற விதிமுறை முதல் முறையாக அறிமுகப்படுத் தப்பட்டுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் பொருத்தமான பெண் வேட்பாளர்களை தேடத் தொடங்கியுள்ளன.

சபை ஒன்றில் 25 வீதமான பெண் வேட்பாளர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப் படாவிடின், அங்கு 25 வீத பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் குறிப்பிட்ட கட்சியில் இருந்து பெண் வேட்பாளர்களை நியமிக்குமாறு கோரப் படும்.

சபை ஒன்றின் அனைத்து அரசியல் கட்சிகளும் பெற்ற வாக்குகளும் கணக்கிடப்பட்டு, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பும் ஆர்வமும் குறைவாக உள்ள நிலையில், பெண் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக பிரதான அரசியல் கட்சிகள் மத்தியில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. (இ-7)

# இன்று திறக்கப்படுகிறது 'சுப்பர் சிறைச்சாலை'




(கொழும்பு)

சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது சிறைச்சாலை இன்று திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை அங்குனுகொலபலஸ்ஸயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறைச்சாலையே தற்போது "சுப்பர் சிறைச்சாலை" என்று அழைக்கப்பட்டு வருகின்றது. இங்கு சிறைக்கைதிகளுக்கும் பார்வையிட வருபவர்களுக்கும் உயர் சொகுசு வசதிகள் வழங்கும் வகையில் இந்த சிறைச்சாலை நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

சுமார் 9.5 பில்லியன் ரூபா செலவில் 658 ஹெக்டேயர் பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இச்சிறைச்சாலையானது இவ்வருடம் மார்ச் மாதம் ஜனாதிபதியின் பங்கு பற்றுதலுடன் திறக்கப்படவிருந்த நிலையில் பிற் போடப்பட்டது.

இச் சிறைச்சாலையானது தங்காலை சிறைச்சாலையில் போதிய வசதிகள் இன்மையால் அங்கு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வரும் சிறைக்கைதிகளுக்கென நிர்மாணிக்கப்பட்டது. சுமார் 1500 சிறைக் கைதிகளை இப்புதிய சிறைச்சாலையில் தங்க வைக்க முடியும்.

இத்திறப்பு விழாவில் மீள் குடியேற்றம் மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நீதியமைச்சர், தலதா அத்துகோறள மற்றும் சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (இ-7)

# 100 அடி பள்ளத்திற்குள் பாய்ந்த வான்



(கொழும்பு)

ஹற்றன், மல்லிகைப்பூ சந்தி பகுதியில் நேற்று காலை வான் ஒன்று 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த இந்த வான், ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியின் மல்லிகைப்பூ சந்தி பகுதியில் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து ஹற்றன் ஓயா ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

வானில் 6 பேர் பயணித்த நிலையில், பெண் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்து டிக்கோயா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து பற்றி மேலதிக விசாரணையை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தீபாவளித் திருநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளித் திருநாள் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவ வித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் சங்கத் தலைவர் ரி.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் சு.சுதர்ஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(இ-10-102)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1220

Search for people, places and things | Nagendram Home

## கல்பனா

சிரித்த நாட்களை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது அழுகை வரும்.. "நண்பர்கள்"



அழுத நாட்களை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது சிரிப்பு வரும்.. "காதல்"

## சங்கீதன்

அம்மாவோடு பைக்கில் செல்லும்போது மட்டும்...



கால்களில் இருக்கும் வண்டியின் பிரேக் தோள்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.!

## பைரவி

டாக்டர்: "ஆபரேஷன் முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்குப் போகலாம்"




நோயாளி: "ஆட்டோவுக்குக் கூட காசு இருக்காதா டாக்டர்?"

## சரண்



எல்லா பெண்களையும் விசிலடித்து திரும்பி பார்க்க வைத்தாலும் செருப்படி வாங்காத ஒரே ஜீவன் குக்கர் தான்!

## வரதன்

நாய்கள் ஜாக்கிரதை என்ற பலகையுடன் நகரத்து வீடுகளும்



வாசலில் வரவேற்பு கோலங்களுடன் கிராமத்து வீடுகளும்

## தாரகி

ஒரு மழை நாளில் உன்னோடு வந்த போதுதான் உன் சுயரூபம் தெரிந்தது...



கொய்யால புள்ளா மேக்கப்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரைகளின் பாதுகாப்புக்கு விசேட திட்டம்

## ஜனாதிபதி தலைமையில் கூட்டம்



(கொழும்பு)

பௌத்த விகாரை பாரம்பரியத்தின் தனித்துவமான கட்டட மரபைக்கொண்ட டெம்பிட்ட விகாரைகளின் பாதுகாப்புக்கு, விசேட நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கினார்.

இலங்கையில் டெம்பிட்ட விகாரைகளின் பாதுகாப்பு குறித்து, ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தூண்களின் மீதமைந்த விகாரைகள் டெம்பிட்ட விகாரைகள் என அழைக்கப்படுகின்றன. இலங்கையில் இந்த விகாரை பாரம்பரியம் கண்டி மற்றும் கம்பளை இராச்சியத்தில் பிரசித்தி பெற்று விளங்கியது.

இலங்கையில் இதுவரையில் 204 டெம்பிட்ட விகாரைகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இவற்றில் ஆறு விகாரைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. மேலும் 85 விகாரைகளில் முன்னுரிமை அடிப்படையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்குத் தேவையான மனித வளத்தையும் நிதியையும் குறைவின்றி வழங்குமாறு, ஜனாதிபதி குறித்த தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

களனி பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆய்வு மையத்தால் தொகுக்கப்பட்ட இலங்கை டெம்பிட்ட விகாரைகள் தொடர்பான ஆய்வுநூல், அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் குறித்து, இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. டெம்பிட்ட விகாரைகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உள்ளடங்கிய அறிவித்தல் பலகைகளை அமைத்தல், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு டெம்பிட்ட விகாரைகளைப் பார்வையிடுவதற்காக சுற்றுலா மார்க்கங்களை ஏற்படுத்தல் மற்றும் பிரசித்தப்படுத்தல் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.


தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

குறிப்பாக, வனப் பாதுகாப்பு பிரதேசங்கள் மற்றும் மக்கள் நடமாட்டமில்லாத பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள தொல்பொருள் இடங்கள் அழிவுக்குட்பட்டு வருவதுடன், இந்த இடங்களைப் பாதுகாப்பதற்கு பொலிஸ், சிவில் பாதுகாப்புப்படை மற்றும் தொல்பொருள் திணைக்களம் இணைந்து ஒரு விசேட பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும், வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களின் பாதுகாப்புக்கு தற்போது சிவில் பாதுகாப்புப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குமாறும் சிவில் பாதுகாப்புப் படை பணிப்பாளர் நாயகத்துக்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (இ-7)

# குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள் இனிமேல் தேர்தலில் போட்டியிட முடியாது

## இராஜாங்க அமைச்சர் ரங்கே தெரிவிப்பு



(கொழும்பு)

நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக இனங் காணப்பட்ட நபர்களுக்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் செயற்குழு இந்த முடிவை ஒரு மனதாக எடுத்துள்ளதாக, இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

புத்தளம் பகுதியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

# சைட்டம் கல்லூரியின் குறைந்தபட்ச தரம் குறித்த அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மாலபே தனியார் வைத்தியக் கல்லூரி (சைட்டம்) தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் வகுக்கப்பட்ட குறைந்தபட்ச தரக் கண்காணிப்பை உள்ளடக்கிய அறிக்கை இலங்கை மருத்துவ சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச தரம் சம்பந்தமாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது சம்பந்தமாக சட்டமா அதிபருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அந்த அறிக்கை கிடைத்ததாக இலங்கை மருத்துவச் சபையின் பதிவாளர் வைத்தியர் டெரன்ஸ் காமினி டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சபையின், மருத்துவக் கல்லூரிக்கான குறைந்தபட்ச தரம் தொடர்பான குழு, அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக நாளை 17ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

அந்த பேச்சுவார்த்தையின் பின்னர் குழுவினால் எடுக்கப்படும் முடிவு சம்பந்தமாக சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக வைத்தியர் டெரன்ஸ் காமினி டி சில்வா கூறினார்.

அதன்பின்னர் மாலபே தனியார் வைத்திய கல்லூரி தொடர்பான குறைந்தபட்ச தரம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று அவர் தெரிவித்தார். (இ-7)

# சூறாவளியால் 16 பேர் பாதிப்பு



(கொழும்பு)

மஸ்கெலியா - சாமிமலை பெயார்லோன்தோட்டம் - மயில்வத்தை பிரிவில், சூறாவளியால் 5 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அதேவேளை, சிறுவர்கள் உட்பட 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இச் சூறாவளியினால் 5 வீடுகளில் உள்ள கூரைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், வீட்டில் இருந்த பொருட்களும் சேதமாகியுள்ளன.

அத்துடன், மின் கம்பங்கள் மற்றும் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக இப் பிரதேசத்தில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க தோட்ட நிர்வாகம் மற்றும் பிரதேசவாசிகள் மற்றும் கிராம சேவகர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மலையக பகுதிகளில் மழையுடன் கூடிய கடும் காற்று வீசுவதால் மக்களை அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, கடும்காற்று தொடர்ந்து வீசி வருவதால், பாதுகாப்பற்ற மற்றும் உயரமான மரங்களுக்கு கீழ் இருப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு பொலிஸார் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)





தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி வடக்கு ஜே/215 கிராம சேவையாளர் அலுவலகத்தில் இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஜெயகரன் தலைமையில் இடம்பெற்றது. அதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- தெல்லிப்பழை செய்தியாளர்)

# மாணவர்களின் கள ஆய்வு



கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல், சுற்றுச்சூழல் மாணவர்களின் கள ஆய்வு [illegible] கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சம்பத்செனவித்ரத்தன தலைமையில் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு நன்னீர் ஏரியில் அண்மையில் இடம்பெற்றது. இதில் சி.சி.எச்.இன் அனுசரணையுடன் வளலாய் கிராம "புன்னகை வட்ட" சிறார்கள் இணைந்து பறவைகள் அவதானிப்பு, இயற்கையை பாதுகாத்தல் மற்றும் சித்திரம் வரைதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் ஒருநாள்!

கலைஞர் மு.கருணாநிதிக்கு இப்போது இரண்டு தமிழ்கள் மட்டும்தான் கையிருப்பு.

சங்கத்தமிழ், குறளோவியத்தமிழ், காப்பியத் தமிழ், வீரத்தமிழ், விவேகத் தமிழ், காதல் தமிழ், கற்பனைத்தமிழ், மேடைத்தமிழ், மாநாட்டுத் தமிழ், விவாதத்தமிழ், வாக்குவாதத்தமிழ், சட்டசபைத் தமிழ், எதிர்ப்புத்தமிழ், ஆதரவுத் தமிழ், கவிதைத்தமிழ், நாடகத்தமிழ், சிறுகதைத் தமிழ், நாவல் தமிழ், சரித்திரக் கதைத் தமிழ், பத்திரிகைத்தமிழ், கடிதத்தமிழ், நகைச்சுவைத் தமிழ், ஆதாரத்தமிழ், அலங்காரத்தமிழ், உணர்ச்சித்தமிழ், எழுச்சித் தமிழ் என எல்லாமும் தவழ்ந்த அவரது நாவில் இப்போது இருப்பது சிரிப்புத் தமிழ், அழுகைத் தமிழ்என்ற இரண்டு மட்டும்தான்.

அன்பானவர்களைப் பார்த்தால் சிரிக்கிறார். இன்னும் அன்பானவர்களைப் பார்த்தால் அழுகிறார். இந்த இரண்டு மட்டுமே தன்னிடம் எஞ்சி இருக்கின்றன என்பதை அவரே உணரவும் செய்கிறார். அந்த உணர்வுதான் அவரை சோகப்படுத்துகிறது.

எப்போதுமே கூடு தங்காத பறவை, கருணாநிதி. வேலையே இல்லாவிட்டாலும் பறந்துகொண்டே இருப்பது அவரது பழக்கம். சி.ஐ.டி. காலனி வீட்டில் அதிகாலையில் எழும் கருணாநிதி, தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயம் வந்து நடைப்பயிற்சி செய்துவிட்டு, கோபாலபுரம் வந்து காலை உணவை முடித்துவிட்டு, கோடம்பாக்கம் முரசொலி அலுவலகம் சென்று உடன்பிறப்பு களுக்குக் கடிதம் எழுதித் தந்துவிட்டு, மதிய உணவுக்காக சி.ஐ.டி. காலனி வந்து, சிறிது ஓய்வுக்குப் பிறகு 4 மணிக்கு கோபாலபுரம் வந்து, பார்வையாளர்களைச் சந்தித்துவிட்டு, 6 மணிக்கு மீண்டும் அண்ணா அறிவாலயம் வந்து, 8.30 மணிக்கு சி.ஐ.டி. காலனி வீட்டுக்குச் செல்வது என்ற பயணத்திலேயே இருந்தார்.முப்பது ஆண்டுகளாக மு.க-வின் மாறாத விடயம் இது.

முதுகுவலி, கால்வலி ஏற்பட்டு இயல்பாய் நடக்கமுடியாத நிலை பத்து ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. உடல் எடையைத் தாங்கும் சக்தி காலுக்கு இல்லாமல் போனது.

எனவே இரண்டு பக்கமும் இரண்டு பேர் தாங்க நடந்து சென்றார். அதன் பிறகு கூச்சம் பார்க்காமல், கஷ்டம் பார்த்து சக்கர நாற்காலியில் பயணப்பட்டார். முன்பு சொன்ன பயணத் திட்டத்தில் நடைப் பயிற்சி குறைந்ததே தவிர மற்றவை தொடர்ந்தன.

முதலமைச்சராக இருந்த காலகட்டமாக இருந்தால் தலைமைச் செயலகம், அதிகாரிகள் சந்திப்பு, அரசுத் திட்டத் தொடக்கம் என்ற பரபரப்பு.

தேர்தல் காலமாக இருந்தால் கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை, பொதுக் கூட்டங்கள், வெளியூர்ப் பயணங்கள் என்ற சுறுசுறுப்பு.

இரண்டும் இல்லாத காலத்திலும் தன்னைத்தானே பதற்றத்தில் வைத்துக் கொள்வார் அவர். 'பிரச்சினை இல் லேன்னா தான் பிரச்சினையே' என்று சொல்லிக் கொள்வார். இப்படிப்பட்ட பிரச்னைப்புயல், ஒரே மையம் கொண்டால் எப்படிப்பட்ட மர்ம மெளனம் சூழுமோ அப்படிப்பட்ட இறுக்கத்தில் இருக்கிறார் கருணாநிதி.

தாயின் வயிற்றில் புத்து மாதம் அமைதியாக இருந்த பிறகு 95 வயதில் கடந்த பத்து மாதங்களாக ஒரே இடத்தில் இருக்கிறார் கருணாநிதி.

நெஞ்சுச்சளி காரணமாக அவருக்கு 2016 செப்டெம்பரில் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. நெஞ்சுச்சளி அகற்றப்பட்டது. ஆனாலும் தொடர்ச்சியான சுவாசத்துக்காக ஸ்டெத்ராடமி பொருத்தப்பட்டது.

உடல் செய்ய வேண்டிய சுவாசத்தை அந்தக் கருவி செய்யும். பொதுவாக, குறிப்பிட்ட காலம் வரை அதை வைத் திருந்து சுவாசம் சீரானதும் எடுத்துவிடுவார்கள்.

ஆனால், கருணாநிதியின் வயதைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாகவே பொருத்திவிட்டார்கள். கழுத்துக்குக் கீழே துளை போடப்பட்டு இக்கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதனால்தான் அவரால் பேசமுடியவில்லை.



இலேசாகப் பேச முயன்றால் இருமல் வந்துவிடுகிறது. மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்த மாணவி அவர். கருணாநிதியிடம் வாழ்த்து பெற வந்திருந்தார்.

"இந்தப் பொண்ணுக்கு நீங்கதான் பேர் வெச்சீங்க. இப்ப டாக்டர் படிக்கப் போறா!" என்று சொல்கிறார்கள். இது கருணாநிதிக்கு நன்கு புரிகிறது. 'வாழ்க வாழ்க' என்று சொல்ல வருகிறார் 'வாழ்' என்றுதான் குரல் வருகிறது. 'க' வரவில்லை அதற்கு மேல் முடியவில்லை.

தலையைத் தொட்டு வாழ்த்துகிறார். இப்படி அடையாளம் கண்டுகொள்கிறார். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன் இதுபோன்ற நிலைமை இல்லை. அவரால் உணர முடியாத நிலைமை இருந்தது.

ராகுல் வந்தபோது ராகுலைப் 'பார்த்தார். அவர் இருக்கும் பக்கம் முகத்தைத் திருப்பினார். ராகுல்தான் கை கொடுத்தார். வைகோ வந்த போது, உணர்வில் கொஞ்சம் தெளிவு இருப்பது தெரிந்தது.

வைகோவுக்கு முன்னதாக ம.தி.மு.க அவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி வந்தார். அவரைப் பார்த்ததும் கருணாநிதி அடையாளம் கண்டுகொண்டார்.

துரைசாமி பழைய ஆள். வைகோ வந்ததும் நன்றாகவே தெரிந்தது. கண்ணீர் தாரை தாரையாக வெளியேறியது. 'முரசொலி விழாவுக்கு வைகோ வர்றாரு' என்று ஸ்டாலின் சொன்னதும், அதைப் புரிந்து சிரித்தார்.

முரசொலி பவளவிழா மலரை ஸ்டாலினுடன் முரசொலி ஆசிரியர் குழுவினர் எடுத்துச் சென்று பக்கம் பக்கமாகப் புரட்டிக் காண்பித்தனர். சில புகைப்படங்களின் மேல் அவர் பார்வை குத்தி நின்றது.

கடந்த வாரத்தில் தி.மு.க உறுப்பினர் சேர்க்கையையொட்டி ஸ்டாலினுடன் மாவட்டச் செயலாளர் ஜெ.அன்பழகன் சென்றபோது இன்னும் கொஞ்சம் தெளிவு ஏற்பட்டு வருவது தெரிந்தது.

ஸ்டாலின் ஏதோ சொல்ல முழுக்கப் புரிந்துகொண்டதுபோல் சிரித்தார். மு.க. தமிழரசு மகன் நடிகர் அருள்நிதி மகனை, செல்வி தூக்கி வந்தார்.

அந்தப் பையனை அவர் மடியில் வைத்ததும் மகிழ்ச்சி கூடுகிறது. ஏதோ ஒன்றைச் சொல்ல வந்து அவருக்குப் புரியவில்லை என்று இரண்டு மூன்று முறை சொன்னால், கோபமும்படுகிறார். 'தெரியுது தெரியுது' என்பது மாதிரி தலையை அசைக்கிறார்.

தன்னைச் சுற்றிலும் ஆட்கள் இருக்கும் போது மகிழ்ச்சியிலும், தனிமையில் வெறுமையிலும் இருக்கிறார் கருணாநிதி. தினமும் காலையில் அறிவாலயம், முரசொலி அலுவலகம் செல்வதற்கு முன் கோபாலபுரம் வந்து கருணாநிதியைச் சந்தித்துவிட்டுச் செல்கிறார் ஸ்டாலின்.

அவரோடு துரைமுருகன், பொன்முடி, எ.வா.வேலு, ஆ.ராசா போன்றவர்கள் வருகிறார்கள். மதிய நேரத்தில் ராஜாத்தி அம்மாள் வருகிறார். சென்னையில் இருந்தால் கனிமொழியும் வந்து விடுவார்.

செல்வி, மு.க.தமிழரசு ஆகியோர் எப்போதும் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் கருணாநிதியைப் பார்க்க அனுமதி இல்லை.

ஆட்சிக் காலத்திலும் அரசியல் காலத்திலும் அவரின் செயலாளர்களாக இருந்த ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ், சண்முகநாதன் இருவரும் தினமும் கோபாலபுரம் வந்துவிடுகிறார்கள்.

பாதுகாவலர்கள் பாண்டியன், வினோத், பிள்ளை மூவரும் உடன் இருக்கிறார்கள். உதவியாளர் நித்யா இருக்கிறார். காவேரி மருத்துவமனை, டாக்டர் மோகன் காமேஸ்வரன் மேற்பார்வையில் சிகிச்சை தொடர்கிறது. ரஞ்சித் என்பவர் தலைமையிலான மருத்துவப் பணியாளர்கள் கட்டுப்பாட்டில் தான் கருணாநிதி முழுமையாக இருக்கிறார்.

உணவு முழுக்கவே திரவம்தான். கருணாநிதிக்கு எப்போதுமே செரிமானப் பிரச்சினை உண்டு. அதனால் திரவ உணவே சரியானது என்று முடிவெடுத்து விட்டார்கள்.

காலை 10 மணிக்கும், இரவு 8 மணிக்கும் மஞ்சள் சால்வை போட்டு உட்கார வைக்கப்படுகிறார் கருணாநிதி. மற்ற நேரங்களில் படுக்கையில்தான்.

சில நேரங்களில் டி.வி. போடப்படுகிறது. அதைக் கவனிக்கிறார். அவராகவே தூங்கி விடுகிறார். விழிக்கும் நேரம், தூங்கும் நேரம் எனக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை.

கருணாநிதி தங்க வைக்கப்பட்டிருப்பது கோபாலபுரம் வீட்டின் முதல் மாடியில். வாரத்துக்கு ஒருமுறை தரைத்தளத்துக்கு அவர் அழைத்து வரப்படுகிறார்.

அங்குதான் தாயாளு அம்மாள் இருக்கிறார். அவரும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிறார். சில நிமிடங்கள் இருவரும் பார்த்தபடி இருக்கிறார்கள்.

மறுபடியும் கருணாநிதி, மேல்மாடிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். இதைத் தவிர வெளிக்காற்று என்பதே இல்லை. எப்போதாவது காரில், சென்னையைச் சுற்றிக் காட்டினாலோ, திடீரென்று ஒரு பெரும் கூட்டத்தை அவருக்குக் கூட்டினாலோ மனதளவில் நல்லது என்றும் சிலர் சொல்ல ஆரம்பித்துள்ளார்கள்.

ஆனால், மருத்துவர்கள், நோய்த் தொற்று ஏற்படலாம் என்று பயப்படுகிறார்கள். கருணாநிதியைப் பார்த்ததும் ஒரு பெரும் கூட்டம் கைதட்ட அது அவரைப் பழைய கருணாநிதியாக மீட்டெடுக்கும் என்பது தி.மு.கவினரின் ஆசையாக இருக்கிறது.

'அன்பார்ந்த' என்று தொடங்கி... 'உயிரிலும் மேலான என் அன்பு உடன்பிறப்புகளே' என்று சொல்லிக் கைதட்டலை அள்ளக் கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும் அவரது இதயத்துக்கு இந்தக் கைதட்டல் இதமாக இருக்கும்.

கருணாநிதிக்குப் பிரச்சினையே முதுமை தான். வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. அகில இந்திய அரசியலைத் தீர்மானித்த அடல் பிஹாரி வாஜ்பாய், ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ், பிரிய ரஞ்சன் தாஸ் முன்ஷி ஆகிய மூன்று தலைவர்களும் இதே நிலைமையில்தான் வீடுகளில் இருக்கிறார்கள்.

இவர்களுக்கும் கருணாநிதிக்கும் என்ன வித்தியாசம் என்றால், அவர்கள் எதுவுமே உணரும் நிலையில் இல்லை. கருணாநிதி உணர்கிறார். அவருக்குப் பல சாதனைகள் உண்டு. அதில் இதுவும் ஒரு சாதனைதான்.

'மிக நீண்ட தூரம் ஓடியவனால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்பது கருணாநிதி அடிக்கடி சொல்வது. நீண்ட தூரம் ஓடியதால் அதிக உயரம் தாண்டிக் கொண்டுதானிருக்கிறார், அதை அனுபவிக்க முடியாமல்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நேர்மையான பிச்சைக்காரர்

ஒரு மனிதன் தனக்கு கிடைக்கும் அதிர்ஷ்டத்தை எப்படி பயன்படுத்துகிறான் என்று அறிய ஒரு மன்னனுக்கு ஆவல் ஏற்பட்டது. அதை சோதிக்க நினைத்து ஒரு நாள் இரண்டு ரொட்டித் துண்டுகளை வரவழைத்து விலையுயர்ந்த வைரக் கற்களை ஒன்றினுள் பதுக்கி வைத்தான்.

பிறகு இரண்டு ரொட்டித் துண்டுகளையும் பணியாளன் ஒருவனிடம் கொடுத்து, "கவனமாகக் கேள். தகுதியுள்ள கண்ணியமான மனிதன் ஒருவனுக்கு இந்த கனமான ரொட்டியைக் கொடு. மற்றொரு சாதாரண ரொட்டியை ஒரு சாதாரண பிச்சைக்காரனுக்குக் கொடு," என்று சொன்னான்.

நீண்ட மேலங்கி அணிந்து அடர்ந்த தாடியுடன் சாமியாரைப் போல் தோற்றமளித்த ஒரு நபருக்கு அந்தப் பணியாளன் வைரக் கற்கள் நிரம்பிய கனமான ரொட்டியை அளித்தான். பிறகு மற்றொன்றை ஒரு பிச்சைக்காரனுக்கு அளித்தான்.

இவற்றையெல்லாம் மன்னன் தன் அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். சாமியார் போன்ற் தோற்றமளித்த நபர் தனக்குக் கிடைத்த ரொட்டியை உற்றுப் பார்த்தான்.

இது சரியாக பக்குவப்படுத்தப் படாததால் கொஞ்சம் கனமாக உள்ளது என்று எண்ணி தன் அருகில் வந்து கொண்டிருந்த பிச்சைக்காரனை அழைத்து, "நண்பா, எனக்குக் கிடைத்த ரொட்டி கனமாக உள்ளது. எனக்கு அவ்வளவு பசியில்லை. ஆகையால் இதை நீ எடுத்துக் கொண்டு உன்னுடையதை எனக்குக் கொடு" என்றான்.



உடனே இருவரும் தங்களுடைய ரொட்டிகளை மாற்றிக் கொண்டனர்.

இதைக் கண்ட மன்னன், "ஆஹா! என்ன கடவுளின் உள்ளம்! ஒரு தவயோகிக்கு செல்வம் தேவை இல்லையாதலால் வைரக கற்கள் உடைய ரொட்டி அவரிடம் தங்காமல் அந்த ஏழையிடம் சென்று விட்டது" என்று நினைத் தான்.

உடனே அந்த சாமியாரையும், பிச்சைக்காரனையும் பின் தொடருமாறு தன் வேலையாட்களுக்கு உத்தரவிட்டான்.

அன்று மாலையே அவ்விருவரைப் பற்றிய தகவல்களும் மன்னனுக்குக் கிடைத்தன. சாமியார் போல் தோற்றமளித்தவர் தன் வீட்டுக்குச் சென்று பொய்த் தாடியையும், மேலங்கியையும் எடுத்துவிட்டு, ஆசைதீர ரொட்டியை உண்டு விட்டு பிறகு பழையபடி தாடியை ஒட்ட வைத்துக் கொண்டு சாமியார் வேடத்தில் பிச்சை எடுக்க கிளம்பி விட்டதாக அறிந்தான்.

தன் வீட்டிற்குச் சென்ற பிச்சைக்காரன், தன் மனைவியுடன் ரொட்டியை உண்ணத் தொடங்கியதும் அதற்குள் இருந்த வைரக் கற்களைக் கண்டான்.

மகிழ்ச்சியில் துள்ளிய அவன் மனைவி அவற்றை தாங்களே எடுத்துக் கொள்ள விரும்பிய போது, அந்தப் பிச்சைக்காரன், "இந்த வைரக்கற்களைக் கொண்டு கடவுள் என் மனசாட்சியை சோதிக்க விரும்புகிறார்.

இந்த ரொட்டியை அளித்த அரசப் பணியாளரிடம் இதைப் பற்றிய உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு வைரக் கற்கள் உள்ளிருப்பது அவருக்குத் தெரியாது என்றால், அவருடைய பொருளை அவரிடமே சேர்க்க வேண்டும். ஆனால், தெரிந்தே இவ்வாறு கொடுத்தார் என்றால், இவை அந்தச் சாமியாரைச் சேர வேண்டும். அதுதான் நியாயம்" என்று கூறினான்.

அந்தப் பிச்சைக்காரனின் நேர்மையையும் உயர்ந்த உள்ளத்தையும் அறிந்த மன்னன் அவனை அரண்மனைக்கு அழைத்து அந்த வைரக் கற்களை அவனுக்கே கொடுத்து மேலும் பல பரிசுகளும் வழங்கினான்.

கடவுளின் அருளால் வைரக் கற்கள் ஒரு போலிச் சாமியாரிடம் சிக்காமல், நேர்மையான ஒரு பிச்சைக்காரனை அடைந்ததை எண்ணி மகிழ்ந்தான் மன்னன். பிச்சைக்காரரும் அதை விற்று கிடைத்த பணத்தில் வியாபாரம் செய்து சந்தோசமாக வாழ்ந்தார்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1781- ஜோர்ஜ் வோஷிங்டன் வேர்ஜினியாவின் யோர்கடவுன் நகரை கைப்பற்றினார்.
- 1799- பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டான்.
- 1813- ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபார்ட் மீது லீப்சிக் நகரில் தாக்குதலை ஆரம்பித்தன.
- 1834- லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்து சேதமடைந்தன.
- 1905- ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவில் மக்கள் கூட்டமொன்றின் மீது சுட்டதில் 94 பேர் கொல்லப்பட்டனர்.
- 1923- வால்ட் டிஸ்னி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1934- குவோமின்டாங்குகளுக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்டுக்களின் தாக்குதல் ஆரம்பமானது.
- 1939- இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மீதான ஜேர்மனிய வான்படையின் முதலாவது தாக்குதல் இடம்பெற்றது.
- 1942- பம்பாயில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 40,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1949- கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர்நிறுத்தத்தை அறிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1951- பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகட் அலி கான் ராவல்பிண்டியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1964- மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
- 1973- ஹென்றி கிசிங்கர், லே டுக் தோ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றனர்.
- 1975- கிழக்குத் தீமோரில் அவுஸ்திரேலிய தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் இந்தோனேசியப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1984- தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டூடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1987- தெற்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற சூறாவளியில் 23 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998- சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினோசெட் லண்டனில் கைது செய்யப்பட்டார்.
- 2003- தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை சிரின் எபாடி பற்றி எழுதப்பட்டது.
- 2006- ஈழப்போர்: இலங்கை, ஹபரணையில் நடந்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 102 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 2006- இலங்கையில் 1987 இல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

### பிறப்புகள்

- 1758- நோவா வெப்ஸ்டர், அமெரிக்க எழுத்தாளர் (இ. 1843)
- 1873- இலெவ் அலெக்சாண்ட்ரோவிக் சுகேவ், ரஷ்ய வேதியியலாளர் (இ. 1922)
- 1881- மு. கதிரேசச் செட்டியார், தமிழறிஞர் (இ. 1953)
- 1886- டேவிட் பென்-குரியன், இஸ்ரேலின் 1வது பிரதமர் (இ. 1973)
- 1890- மரிய கொரெற்றி, இத்தாலியப் புனிதர் (இ. 1902)
- 1918- லூயி அல்தூசர், அல்சீரிய-பிரான்சிய மெய்யியலாளர் (இ. 1990)
- 1946- நவீன் பட்நாய்க், ஒடிசா இந்திய அரசியல்வாதி
- 1948- ஹேமமாலினி, இந்திய நடிகை
- 1963- சூசை, கடற்புலிகளின் தலைவர்
- 1975- ஜாக் கலிஸ், தென்னாபிரிக்கத் துடுப்பாளர்
- 1977- ஜான் மேயர், அமெரிக்கப் பாடகர், இசைக் கலைஞர்
- 1982- பிரித்விராஜ் சுகுமாரன், இந்திய நடிகர், பாடகர்
- 1990- அனிருத் ரவிச்சந்திரன், இந்திய நடிகர், பாடகர்

### இறப்புகள்

- 1799- கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் (பி. 1760)
- 1951- லியாகத் அலி கான், பாகிஸ்தானின் 1வது பிரதமர் (பி. 1895)
- 1956- ஜூல்ஸ் ரிமெட், பிரான்சியத் தொழிலதிபர் (பி. 1873)
- 1998- ஜான் பாஸ்டல், அமெரிக்க கணனியியலாளர (பி. 1943)

### சிறப்பு நாள்

- ஆசிரியர் நாள் (சிலி)
- மயக்கவியல் நாள்
- உலக உணவு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 600 | 350 | 400 |
| தக்காளி | 200 | 140 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 80 | 60 |
| கோவா | 120 | 80 | 100 | 160 | 120 |
| கரட் | 100 | 80 | 160 | 90 | 200 |
| பூசணி | 50 | 30 | 60 | 40 | 60 |
| புடோல் | 80 | 70 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 100 | 75 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 200 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 75 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 280 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 60 | 70 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 140 | 90 | 160 |
| லீக்ஸ் | 150 | 80 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 80 | 70 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 250 | 240 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 130 | 300 | 150 | 200 |
| போஞ்சி | 200 | 100 | 160 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | 140 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 280 | 220 | 300 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 70 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 380 | — | - | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 | 240 |
| முள்ளங்கி | 70 | 60 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | 30 | 60 | - | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் சேற்றில் கால்வைக்காவிடில்
நீங்கள் சோற்றில் கைவைக்க முடியாது.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இழந்த எங்கள் விவசாயத்தை எப்போது கட்டியெழுப்புவோம்?

யாழ்ப்பாண மக்கள் விவசாயத்தில் மிக உன்னதமானவர்கள். அதனால் யாழ்ப்பாண விவசாயத்துக்கு நாட்டில் மிகப்பெரும் மதிப்பு உண்டு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த தேசிய தமிழ் விழாவுக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாண விவசாயத்தைப் புகழ்ந்து பேசியதுடன் 1960களில் யாழ்ப்பாண விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு விவசாயத் தொழிலை உன்னதமாகச் செய்கின்றனர் எனப் பாடப் புத்தகங்களில் வெளிவந்தது எனவும் நினைவுபடுத்தினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய எங்கள் விவசாயத்தின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

யுத்தம் காரணமாக, எங்கள் விவசாய மண் செய்கையற்றுக் கிடப்பதுடன் ஒரு பகுதி விவசாய நிலம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்டிருக்க, எங்கள் விவசாயச் செய்கை பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது.

இதுதவிர, யுத்த சூழ்நிலைகள் விவசாய உள்ளீடுகளுக்குப் பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய நிலையில் வடபுலத்து விவசாயிகள் கடன்படு நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

கடன் சுமை அவர்களைத் துரத்த விவசாயத்தில் இருந்து கட்டாய ஓய்வு எடுக்கின்ற பரிதாபநிலைக்கு எங்கள் விவசாயிகள் தள்ளப்பட்டனர். இந்நிலையில் வடபுலத்து விவசாயம் இன்று கவலைக்கிடமாக உள்ளது.

இந்நிலைமை மாற்றப்பட வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கூறியது போல வடக்கு மாகாண விவசாயத்தை நாம் மேன்மைப்படுத்த வேண்டும்.

எங்கள் மண்ணில் இருக்கக்கூடிய அத்தனை விவசாய நிலங்களிலும் பயிர்ச்செய்கை இடம்பெறவும் களனிகள் தோறும் நெல் விளைவிக்கப்படுவதும் கட்டாயமானதாகும்.

இது விடயத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் விசேட திட்டமொன்றை அமுலாக்குவது பற்றி துறைசார் நிபுணர்களுடனும் அனுபவமிக்க விவசாயிகளுடனும் கூடி ஆராய்வது பொருத்தமானதாகும்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புத்தூரில் நடைபெற்ற தேசிய உணவுப் புரட்சித் திட்ட நிகழ்வொன்றில் பங்கேற்றார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண அமைச்சர்கள் கலந்து கொண்டு வடக்கு மாகாண விவசாயிகளின் பிரச்சினையை எடுத்துரைத்தமை மிகவும் பொருத்தப்பாடானதாகும்.

அவ்வாறு சந்தித்ததன் மூலம் வட பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் அதன் தொடர் நடவடிக்கையாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஜனாதிபதியை அடிக்கடி சந்தித்து வட மாகாண விவசாயிகள் பெற்ற வங்கிக்கடன்களுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்வதுடன் விசேட உதவித் திட்டங்களையும் வழங்குமாறு கோர வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைப்பதென்பது நீதியானது. அதிலும் விவசாயத்தை உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படும் ஜனாதிபதி மைத்திரி மூலமாக அதனைச் செய்விப்பது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதாக இருக்கும்.

# வெளிநாட்டுப் பிரஜையின் அங்கத்துவம் குறித்து கவனம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியிலும், வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை உரிமையாக் கொண்டவர்கள் அலுவலகக் கடமைகளில் ஈடுபடக் கூடாது என்பது தொடர்பில், கவனம் செலுத்தவுள்ளதாக, தேர்தல்கள் ஆணையகம், தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக் குடியுரிமையைக் கொண்டவரும், லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரும் தேசிய ஜனநாயகக் கட்சியின் செயலாளருமான ஷலில முணசிங்க, நிதி மோடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், தேர்தல் ஆணையகத்தால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் காரணம், தேசிய ஜனநாயகக் கட்சி, அரசியல் கட்சி என்ற வகையில், அதற்குத் தேவையான சட்டத்துக்குக் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையக அங்கத்தவர் பேராசிரியர் ரத்ன ஜீவன் ஹூல் தெரிவித்தார்.

"நாடாளுமன்றமே, சட்டத்தை இயற்றுகிறது. அவற்றை மாற்றுவதற்கு, எமக்கு எந்தவொரு வழியும் கிடையாது" என்று அவர் கூறியதோடு, வெளிநாட்டுப் பிரஜையொருவரால், அரசியல் கட்சியின் அங்கத்தவராக இருத்தல் தொடர்பில், அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் கூறினார்.

"சட்டத்தை மீறி, வெளிநாட்டுப் பிரஜையொருவருக்கு, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமுடியாது" என்று அவர் கூறியுள்ளார். (இ-7)

## ஆணைக்குழுமுன் எந்நேரத்திலும் விளக்கமளிக்க பிரதமர் தயார்

பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க எந்த நேரத்திலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆணைக்குழுமுன்னிலையில் பிரதமர் குறித்து தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு விளக்கமளிக்க, எந்த நேரத்திலும் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## திடீர் வேலைநிறுத்தத்தால் 12 மில்லியன் ரூபா நஷ்டம்

ரயில் சாரதிகளின் பணிபுறக் கணிப்பு காரணமாக ரயில்வே திணைக்களத்திற்கு 12 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பணிப்புறக்கணிப்பு காரணமாக பயணிகளின் பயணச்சீட்டு விற்பனை மற்றும் ஆசன ஒதுக்கீடு மூலம் ரயில்வே திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம், கிடைக்காமல்போயுளளது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி பிற்பகல் முதல் ரயில்வே ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் மற்றும் சாரதிகள் ஆரம்பித்த திடீர் பணிப்புறக்கணிப்பு காரணமாக 350க்கும் மேறபட்ட ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

இதன் காரணமாக ரயிலில் பயணிக்க ஆசனங்களை ஒதுக்கிய்வர்கள் மற்றும் பயணச்சீட்டுக்களை பெற்றிருந்த மக்கள் பெரும் அவதிக்கு உள்ளானதாக ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது. (மு-11)

## 2014 இல் 4800 பேர் மதமாற்றமாம்!

(கொழும்பு)

சிங்கள பௌத்த மக்களை இந்நாட்டில் சிறுபான்மையாக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் கடந்த 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் சிங்கள யுவதிகள் 4800 பேர் இஸ்லாம் மதத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

சிங்கள வார இதழொன்றில் வெளியாகியுள்ள புகைபடங்களுடனான கட்டுரையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் இளைஞர்கள் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்ததன் மூலமாக திட்டமிட்டு இந்த மதமாற்றம் நடைபெற்றுள்ளதாகவும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் சனப் பெருக்கம தொடர்பில் இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகள் உண்மையா னதா? எனும் தலைப்பில் இக்கட்டுரை வெளியாகியுள்ளது.

நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் சிறுபான்மையினமாகவுள்ள முஸ்லிம்கள் தங்களைப் பெரும்பான்மையாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், இந்த தகவல்கள் இணையத் தளங்களில் வெளியாவது பொய்யாயின் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் முன் வந்து நிரூபிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதைப்பொருட்களுடன் நான்கு இளைஞர்கள் கைது

திருகோணமலையில் போதை மாத்திரை மற்றும் கேரளக் கஞ்சாவுடன் நான்கு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லிங்கநகர் மற்றும் உப்புவெளி பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட செல்வநகர், காந்திநகர் ஆகிய பிரதேசங்களிலேயே இந்த நடவடி க்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இதன்படி, லிங்கநகர் - காந்திநகர் பகுதியில் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 13 போதை மாத்திரைகளும் செல்வநகர் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டவர்களிடம் 5 கிராம் கேரளக் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளதாக போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்கள் போதைப் பொருள் பாவனையாளர்கள் என்பதோடு, விற்பனையாளர்களாகவும் செயற்பட்டு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-7)

உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

சுய மார்பக பரிசோதனையின் போது மார்பகத்தில் அசாதாரண கட்டிகள் இருப்பதாக சந்தேகிப்பின் வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ளுங்கள்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் மாநகர சபை

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வேண்டல் வளம்



ஒவ்வொருவருடைய தேவையையும், விருப்பத்தையும் உணர்ந்து, எந்த இடத்தில் குறை இருக்கிறது, எந்த இடத்தில் நிறை இருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டு உதவி செய்வது, வாழ்வது தான் அன்பும் கருணையும். இதைத் தமிழில் வேண்டல் வளம் என்று சொல்வார்கள். வளம் என்றால் நம்மிடத்தில் இயற்கையாக உள்ள இருப்பு என்பதாகும். வேண்டல் என்றால் அவ்வப்பொழுது ஏற்படக் கூடிய தேவை என்ன என்பதாகும். இதே போன்று பிறரின் வேண்டல் வளம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வளத்தைப் பயன்படுத்தவும், வேண்டலைப் பூர்த்தி செய்யவும் உதவ வேண்டும் என்பதுதான் வேண்டல் வளம் தெரிந்து விளைவறிந்து வாழ்தல் என்பதாகும்.

இப்பொழுது அந்த வார்த்தை வழக்கில் வண்டவாளம் என்றாகி விட்டது. நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும், நம்மோடு இணைந்து உள்ளவர்களுக்கும் வேண்டல் வளம் தெரிந்து விட்டால், நான் எந்த அளவில் என்னுடைய வேண்டல் வளம் இந்த இரண்டையும் வைத்துக் கொண்டு அவர்களின் மூலமாக என்ன பெற முடியும், அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை அறிந்தால், உயிர்களிடத்து அன்பும், கருணையுமாக இருக்கக் கற்றுக் கொள்ளலாம். இந்த முறையில் ஒவ்வொருவரும் அன்பையும், கருணையையும் எழுச்சி பெறச் செய்து, அதன் வழியே [illegible] ஓர் இனிமை ஏற்படும் அல்லவா? அந்த இனிமை தான் வாழ்வில் முழுமை தரும், அறிவை உயர்த்தி வைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமரர் முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட போட்டி

## சம்பியனானது புத்தூர் கலைமதி




அமரர் முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்தமாக ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்திவரும் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி (14.10.2017) அன்று மின்னொளியில் நடைபெற்றது.

ரசிகர்கள் கரகோஷம் வான் முழங்க இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் கலைமதி வி.க. மோதியது.

ஆரம்பம் முதலே மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செற்றினை 25:13 என புத்தூர் கலைமதி கைப்பற்றியது. எனினும்வீறுகொண்டெழுந்த ஆவரங்கால் இந்து அடுத்த இரு செற்களையும் . 25:20 . 25:23 என கைப்பற்றியது.

மீண்டும் நான்காவது செற்றினை புத்தூர் கலைமதி 25:20 என கைப்பற்ற போட்டி மேலும் விறுவிறுப்பானது.

இதனால் வெற்றியை தீர்மானிக்கின்ற இறுதி செற்றில் இரு அணிகளும் கடும் போட்டி போட்டுக்கொண்டு விளையாடின. 15 புள்ளிகளை கொண்ட இறுதி செற்றில் 15:12 என்ற புள்ளிவரை விறுவிறுப்பாக சென்று திரில் வெற்றி பெற்று 2017ஆம் ஆண்டின் சம்பியனாக முடிசூடியது புத்தூர் கலைமதி வி.க.

போட்டியின் நாயகனாக வாகீசன் தெரிவானார். தொடரின் நாயகனாகவும் மக்கள் மனம் கவர்ந்த வீரராகவும் ஆவரங்கால் இந்துவின் அதிரடி வீரன் ஜனகன் தெரிவானார். (க)

# இளங்கதிர் விளையாட்டுக்கழகம் கால் இறுதிக்கு தெரிவானது



தீபத்திருநாளை முன்னிட்டு அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் குளிர் கால மென்பந்து சுற்றுப்போட்டியில் முதலாவது போட்டியில் ICBT campus அணியை வீழ்த்தி இரண்டாவது போட்டியில் அரியாலை ACC விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றது இளங்கதிர் விளையாட்டுக் கழகம். (க)

### தேசிய மட்ட மெய்வல்லுநர்

## மகாஜன மங்கை ஹெரினாவுக்கு இரண்டாவது தங்கப்பதக்கம்



தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் மகாஜனக் கல்லூரிக்கும் மகாஜன மங்கை ஹெரினாவுக்கும் இரண்டாவது தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

(14.10.2017) அன்று நடைபெற்ற 18 வயது பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் 3.10 மீற்றர் தாண்டி தங்கம் வென்றார் ஹெரினா நடைபெற்ற உயரம் பாய்தலிலும் 1.58 மீற்றர் தாண்டி தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# அரையிறுதிக்கு முன்னேறியது சென்.சேவியர் வி.கழகம்






மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டி (14.10.2017) அன்று நடைபெற்ற போட்டியில் சென். சேவியர் அணியை எதிர்த்து யாழ். அண்ணா ஸ்ரார் மோதியது. ஆட்டத்தில் சென்.சேவியர் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சென். சேவியர் அணி சார்பாக நிறோசன் -1, றொசான் -1 கோல் போட்டனர். யாழ். அண்ணா ஸ்ரார் சார்பாக மதன் - 1 கோல் போட்டார். போட்டியின் ஆட்டநாயகனாக சென்சேவியர் அணி வீரர் றஞ்சித்குமார் தெரிவு செய்யப்பட்டார். (க)

# இறுதி ஓவரில் வீனஸ் வெற்றி

அளவெட்டி மத்தி வி.க நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டியில் 14.10.2017 அன்று நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் வி.கழகத்தை எதிர்த்து வீனஸ் வி.க.மோதியது.

முதலில் துடுப் பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் வி.க 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 42 ஓட்டங்களை பெற்றது.

அதிகபட்சமாக கபிலன் 14. டிலோசன் 13 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ராஜா 2 இலக்குகளை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வீனஸ் வி.க பரபரப்பான இறுதி ஓவரில் திரில் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் கிருபாகரன் 15 ஓட்டங்களை பெற்றார்.(க)



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட நீளம் பாய்தல் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரி மாணவன் செ.செந்தீஸ் 6.08 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

### அன்ரனீஸ்சின் உதைபந்தாட்டம்

# கலைமதி - சென்.சேவியர் நாளை பலப்பரீட்சை





மணற்காடு சென்.அன்ரனீஸ் வி.கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் [illegible] போட்டியானது நாளை (2017.10.17) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில்நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி, பிரதமருக்கு...

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தலைமையில் தேசிய தீபாவளி விழா நேற்று அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பை உருவாக்கி இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் புதிய பயணத்தை ஜனாதிபதியும் பிரதமரும் ஆரம்பித்துள்ளனர்.

அவர்களுக்கு நாம் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவு வழங்குவதுடன் அதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இது புனித பயணமாகும். இந்த பயணத்தில் அவர்கள் இருவரும் வெற்றிகாண வேண்டும்.

இவ்வருட தீபாவளி நிகழ்வை விடவும் அடுத்த வருடம் தீபாவளி பண்டிகை மிகவும் சிறப்பான சூழலில் மகிழ்ச்சியுடன் நடைபெறும் என இவ்விடத்தில் நான் கூற விரும்புகின்றேன்.

பிளவுபடாத பிரிக்கமுடியாத ஒருமித்த நாட்டுக்குள் அனைத்து இனத்தவர்களும் சமஉரிமையுடன் வாழும் வகையில் அந்த புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறான அரசியலமைப்பினை உருவாக்குவதன் மூலமாக நாங்கள் எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக வாழ முடியும். அத்துடன் நாம் இலங்கையர் என்று பெருமையுடன் கூறிக்கொள்வதற்கு நாம் விரும்புகின்றோம். எமது மக்களும் அதனை விரும்புகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (மு-11)

## விழிப்புடன் இருக்க...

பகுதிகளில் மலேரியா தொற்று நோய் ஏற்படுவதற்கான அபாயகர சூழல் காணப்படுவதாகவும், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே. நந்தகுமாரை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

மலேரியா நோயை பரப்பும் அனாஃபிலிஸ நுளம்பு வகை யாழ் நகரை அண்டிய பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ளது. அதாவது இந்த மாதம் ஆரம்பத்தில் யாழ் புகையிர நிலையத்தை அண்டிய பகுதி, குருநகர் பகுதி, யாழ்.நகர் பகுதி, மற்றும் யாழ் இந்துக்கல்லூரியை அண்டிய பகுதி ஆகியவற்றில் இந்த நுளம்பு இனம் காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இதுவரை 4 பேர் இந்த நோய் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் வெளிநாட்டில் நோய் தொற்றுக்குள்ளாகிய பின்னர் யாழ் நகர்ப்பகுதிக்கு வந்துள்ளனர்.

இவ்வாறு நோய் தொற்றுடன் வரும் ஒருவரில் இருந்து மிக இலகுவாக ஏனையவர்களுக்கு தொற்றக்கூடிய சாத்தியங்கள் இங்கு ஏற்பட்டுள்ளன. ஏனெனில் அந்த நோயை பரப்பும் நுளம்புகள், கடந்த டிசம்பர் மாதம் மன்னார் பகுதியிலும் கடந்த மாதம் வவுனியா பகுதியிலும் இந்த வருடம் யாழ்.மாவட்டத்திலும் இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நுளம்பு கிணறுகள், பாவனைக்கு உட்படுத்தாத தண்ணீர் தொட்டிகள் என்பவற்றில் இருந்து தான் பெருகுகின்றன. தேவையற்ற தண்ணீர் தொட்டிகளை அழித்து விடுவது மிகவும் சிறந்த செயற்பாடு ஆகும். கிணறுகளுக்குள் நுளம்பு உட்செல்லாத வகையில் வலைகளை கிணற்றை சுற்றி பொருத்த வேண்டும். இது உடனடியாக செய்ய வேண்டிய நடவடிக்கை ஆகும்

இந்த நோய் தொற்றை ஏற்படுத்தும் நுளம்பினத்தை அழிப்பதற்கு சுகாதார திணைக்களத்தால் பல்வேறு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. துரிதமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கிணறுகளுக்கு மீன்களை விடுதலும், மருந்துகள் தூவும் செயற்பாட்டை துரிதமாக மேற்கொண்டு வருகிறோம். அதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு மலேரியா தொடர்பில் விழிப்புணர்வு இருக்க வேண்டும். இந்தியாவுக்கு சென்று வருவதற்காக சென்றால் முற்பாதுகாப்பு தடுப்பு மருந்துகளை பெற்றுச்செல்வது மிகவும் நல்லதாக இருக்கும். நோயில் இருந்து பாதுகாத்து கொள்ள முடியும்.

எனவே டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் தற்போது மலேரியா தாக்கம் ஏற்படுமென தென்படுவது ஆபத்தான நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இதில் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பொது மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## நாட்டை துண்டாட...

புதிய அரசியல் அமைப்பினைக் கொண்டு வர முழுமையான ஆதரவினை வழங்குகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய சுதந்திர முன்னணியின் மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (மு-11)

## வட-கிழக்கு...

இலங்கையின் நிலப்பரப்பு பல இராஜ்ஜியங்களாக வெவ்வேறாக ஆளப்பட்டுவந்தன. நிர்வாக சீரமைப்பு என்ற பெயரில் ஆங்கிலேயர் 1833-ம் ஆண்டு சகல இராஜ்ஜியங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முழு இலங்கைக்கென ஒரு தனிநிர்வாக அலகை உண்டாக்கினார்கள். இதனால் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக இருந்த மக்கள் முழு இலங்கையிலும் சிறு பான்மையினர் ஆனார்கள். ஆனார்கள் என்பதிலும் பார்க்க ஆக்கப்பட்டார்கள் என்பதே உண்மை. இப்பொழுதும் வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையினர்.

முழு இலங்கையையும் சுதந்திரத்தின் போது ஆங்கிலேயர் இலங்கையரிடம் கையளித்து விட்டுச் சென்றனர். சுதந்திரத்தின் போது இலங்கையர் என்ற அடிப்படையில் நாட்டை ஏற்றுக்கொண்ட எம் அரசியல்வாதிகள் அதிகாரம் கிடைத்த உடனேயே தாம் இலங்கையர் என்ற எண்ணத்தைக் கைவிட்டு விட்டனர். சிங்களவர், இலங்கைத் தமிழர், மலையகத்தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், மலேயர் எனதம்மைப் பிரித்துப்பார்க்கவும் சிந்திக்கவுந்தொடங்கி விட்டார்கள். பெரும்பான்மையினர் என்ற அடிப்படையில் அவர்கள் சட்டங்களைப் பெரும்பான்மையினருக்கு ஏற்றவிதத்திலும் சிறுபான்மையினரைப் புறக்கணிக்கும் விதத்திலும் யாத்தனர். அதனால் 1949-ம் ஆண்டில் மலையகத் தமிழர்கள் வாக்குரிமைபறிக்கப்பட்டது. 1956-ம் ஆண்டு கொண்டுவந்த "சிங்களம் மட்டும்" சட்டம் தமிழ் அரச அலுவலர்களின் உரித்துக்களைப் பறித்தெடுத்தது. தரப்படுத்தல் எம் மாணவர்களின் உயர் கல்வியில் கை வைத்தது. அரச காணிக்குடியேற்றங்கள் தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களைபிற இடங்களில் இருந்து கொண்டு வந்த பெரும்பான்மையினர் பறித்தெடுத்து குடியிருக்க உதவின.

1970-ம் ஆண்டளவில்தான் திருகோணமலையைச் சுற்றி சிங்களக் கிராமங்கள் உருவாகத் தொடங்கின. பொலிஸார் மேலான அதிகாரம்மத்தியின் கைவசம் இருந்ததால் வடகிழக்கு மாகாணங்களில் சிங்களப் பொலிஸாரின் ஆதிக்கம் கூடியது. இராணுவத்தினரும் அழைக்கப்பட்டார்கள். இவ்வாறான சூழ் நிலையில்தான் இளைஞர்கள் ஆயு தம் ஏந்தினார்கள்.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது குறிப்பிட்ட சில பௌத்த வணக்கஸ் தலங்களை விடவேறெங்கும் பௌத்தகோயில்களோ, விகாரைகளோ இருக்கவில்லை. இப்பொழுது இராணுவ அனுசரணையுடன் பௌத்த வணக்கஸ்தலங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு வருகின்றன. பௌத்தர்கள் இல்லாத இடங்களில் எல்லாம் அவை எழும்புகின்றன.

போருக்குப் பின்னர் தான், இது ஒரு "சிங்கள பௌத்தநாடு" என்ற குரல் ஆவேசமாக ஒலித்து வருகின்றது. சரித்திரம் பிழையாக எடுத்துரைக்கப்பட்டு இந்த நாடு ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற பொய்யான, பிழையான, தவறான கருத்தை முன்வைத்து வருகின்றார்கள்.

வடக்கில் எந்தக் காலத்திலுமே சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழவில்லை. தமிழ் பௌத்தர்கள் வடகிழக்கில் சில நூற்றாண்டு காலம் வாழ்ந்தார்கள். இன்று இருக்கும் பௌத்த எச்சங்கள் அவர்களால் விடப்பட்டவையே. நாயன்மார்களின் பக்திப் பிரவாகம் மக்களை ஈர்க்கத் தொடங்கியபோது தமிழ் பௌத்தர்கள் பௌத்தத்தைக் கை விட்டுவிட்டு முன் போல் சைவர்கள் ஆனார்கள். ஆகவே வடகிழக்கு பௌத்தத்தை வேண்டாம் என்று கைவிட்ட ஒரு பிரதேசம். அங்கு மீளவும் பௌத்தத்தை அதுவும் அரச உதவியுடன் [illegible] வடகிழக்கு மக்களின் [illegible]

# கடத்தப்பட்ட கணவன், மகனை; தேடியலைந்த தாயும் மரணம்

(கொழும்பு)

கொழும்பில் 2008ஆம் ஆண்டு வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கச் செய்யப்பட்ட ரொசான்லியோனின் தாயாரும் அமலன் லியோனின் மனைவியுமான குடும்பத்தலைவி ஜெசிந்தா பீரிஸ் மாரடைப்பால் மரணம் அடைந்துள்ளார்.

கடத்தப்பட்ட தனது கணவர் மற்றும் மகனுக்கு நீதிகோரியும் அவர்களை தேடி கண்டறியும் போராட்டத்தில் பல ஆண்டுகாலமாக ஈடுபட்டுவந்த நிலையிலே நேற்றுமுன்தினம் காலை அவர் காலமானார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு 2008, 2009ஆம் ஆண்டுகளில் 11 தமிழ் இளைஞர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த சம்பவத்தில் தெஹிவளை-பெர்னாண்டோ மாவத்தையிலுள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ர்ாமலிங்கம், மொஹமட்திலான், மொஹமட் சாஜித் ஆகிய 5 மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர்.

இதனை விட கொட்டாஞ்சேனையை சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே, ஜோன் ரீட் மற்றும் நேற்றுமுன்தினம் உயிரிழந்த ஜெசிந்தா பீரிஸின் கணவரான மன்னார் முத்தரிப்புத் துறையைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் மகனான ரொஷான் லியோன், திருகோணமலையைச் சேர்ந்த கனகராஜா கஜன் உள்ளிட்டோரும் அன்றைய கால கட்டத்தில் வெள்ளைவானில் கடத்தப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு - கோட்டை பிரதான நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணைக்கும் ரொசான் லியோனின் தாயாரான ஜெசிந்தா பீரிஸ் கொழும்பிற்கு வருகை தந்திருந்தார்.

கொழும்பில் கடற்படையின் இரகசிய முகாமில் கண்டெடுக்கப்பட்ட 12 அடையாள அட்டைகளில் மன்னார் முத்தரிப்பு துறையைச் சேர்ந்த றொசான் லியோனின்அடையாள அட்டையும் அதில் அடையாளம் காணப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் சந்தேகத்தின்பேரில் 7 கடற்படையினர் கைதுசெய்யப்பட்டு பிணை வழங்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 20ஆம் திகதி வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடிய போராட்டத்தினால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்த தந்தை ஒருவர் உட்பட 4 தாய்மார் ஏற்கெனவே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-281)

# கொள்ளையடிப்பது என்றால் பெரிதாக கொள்ளையடியுங்கள்

## ரில்வின் சில்வா விசனம்

(கொழும்பு)

மோசடியாளர்கள் அரசியலுக்கு வருவதை தடுக்க சமூகத்திற்கு சேவை செய்யக்கூடிய நபர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 19ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு வாரத்திற்குள் மேன்முறையீடு செய்து வழக்கு விசாரிக்கப்பட்டு வீட்டுக்கு வந்து விட்டனர்.

சாதாரண மக்கள் பிணை பெற முடியாது வருடக்கணக்கில் சிறையில் இருக்கின்றனர்.

நாமல் ராஜபக்ஷவின் செயலாளர் எனக் கூறிய பெண்ணைக் கைது செய்ய சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கைது செய்தார்கள், நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினார்கள். பிணை வழங்கப்பட்டது.

சிரிலிய சவிய கொள்ளை குறித்து எந்த பேச்சும் இல்லை. இதன்மூலம் கொள்ளையடிப்பது என்றால் சிறியளவில் கொள்ளையடிக்க வேண்டாம் பாரியளவில் கொள்ளையடியுங்கள் என்ற செய்தியையே கூறுகின்றனர் என ரில்வின் சில்வா விசனம் தெரிவித்துள்ளார். (மு)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை கனிஷ்ட ஊழியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கனிஷ்ட ஊழியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படாமையை கண்டித்து நாளை காலை முதல் வைத்திய சாலை முன்றலில் தொடர்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் வடமாகாண செயற்பாடாளர் என.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 160 பேர் சிற்றூழியர்களாக கடமையாற்றுகின்றனர். இங்கு அதிகளவான சேவை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. சிற்றூழியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு கடந்த 6 மாதங்களாக வழங்கப்படவில்லை என்றும், அந்த கொடுப்பனவை விரைவில் வழங்க வேண்டும் என கோரியும் இனிவரும் காலங்களில் மாதாந்தம் அக் கொடுப்பனவை வழங்க வேண்டும் என கோரி இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

உரிய தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் இதனால் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வைத்தியசாலை அதிகாரிகளே பொறுப்பு எனவும் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (மு-9)

பாதிப்பதானது. வடகிழக்கு மக்கள் பெரும்பான்மையினர் பௌத்தர்கள் அல்லாதவர்கள். இப்போதிருக்கும் பௌத்தர்கள் கூட அரச உளவீட்டால் அண்மைக் காலங்களில் உள்ளேற்கப்பட்டவர்கள். ஆகவே இலங்கையைப் பௌத்த நாடென்றோ சிங்கள நாடென்றோ கூறுவதை நான் வலுவாக நிராகரிக்கின்றேன்.

இப்பொழுதும் எப்பொழுதும் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையினராக இருந்து வந்துள்ளனர். தென்னிந்தியாவில் பௌத்தம் வளர்ச்சியடைந்த காலத்தில் இலங்கையின் [illegible] பௌத்தம் வளர்ச்சி கண்டது. அங்கு சைவம் தலைதூக்கிய போது இங்கும் சைவம் தலைதூக்கியது. பௌத்தத்தை வேண்டாம் என்று ஒதுக்கியவட கிழக்கை பௌத்த நாடு என்ற அடைமொழியின் கீழ்க் கொண்டு வருவதை நான் கண்டிக்கின்றேன். மற்றைய ஏழு மாகாணங்களில் பௌத்தர்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் அவற்றில் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கலாம். வடக்கு கிழக்கு மாகாணங்களோ சமஷ்டி அடிப்படையில் மதச் சார்பற்ற அலகாக உருவாக்கப்படவேண்டும் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுக்கு ஒரு...

யல் கைதிகளாக கருதமுடியும் என கேள்வி எழுப்பிய பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா, விடுதலைப் புலிகளை ஒருபோதும் விடுதலை செய்யப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் வடக்கில் தொடர்ச்சியாக போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து கூறும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (மு)

## வேட்பாளர்கள் தெரி...

அவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின், பெண்கள் அமைப்புகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் தலைமை தாங்கும் பெண்களில் இருந்து தெரிவு செய்வோம் என்றும்,இளையவர்களை அரங்கிற்குக் கொண்டு வருவதில் நாங்கள் கவனம் செலுத்துவோம்.

தேர்தல் பரப்புரைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பணம் செலவிடவில்லை. வேட்பாளர்கள் தமது பணத்தைச் செலவிட விரும்பினால் அப்படிச் செய்யலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு)

## 50 ஆயிரம் வீட்டு...

சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம், பொருளாதார அபிவிருத்திக்குழு மற்றும் வடகிழக்கு செயற்பாட்டுக் குழுவுடன் இணைந்து, 50ஆயிரம் வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது.

யாழ். மாவட்டத்தில் 12ஆயிரம் பேர் நண்பர்கள், உறவினர்களுடன் இருக்கின்றார்கள். நலன்புரி நிலையங்களில் 700 ற்கும் அதிகமான குடும்பங்கள் இருக்கின்றார்கள். அதனால், யாழ்.மாவட்டத்திற்கென 14ஆயிரத்து 500 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ் வீட்டுத்திட்டங்களை வழங்குகின்ற போது, புள்ளி அடிப்படையில் தான் வழங்கப்படும்.

இடம்பெயர்ந்தோர்கள், மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்தவர்களும் உள்வாங்கப்பட்டு புள்ளிகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளிகள் குடும்பம், புள்ளிகளின் அடிப்படையிலும், முன்னுரிமையின் அடிப்படையிலும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு)

## யாழ்ப்பாணத்தில்...

காரணத்தினால் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். அன்றைய தினம் மேலதிக சிகிச்சைக்காக நண்பகல் 12 மணியளவில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு தொடர்ச்சியான சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் அதிகாலை 2 மணியளவில் குறித்த மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இணுவில் பகுதியை சேர்ந்த குடும்ப பெண் நான்கு நாட்கள் தொடர்ச்சியான காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.இவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளாார்.ஆனால் அவர் குணமடையாத காரணத்தினால் நேற்றைய தினம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அப்போது சிகிச்சை பெறுவதற்காக வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்த போதே மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டெங்கு நோய் தாக்கம் மிக அதிகரித்து காணப்படுகிறது. நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. யாழ் மாவட்ட சுகாதார திணைக்களத்தின் தரவுகளின் படி இந்த மாதத்தில் மாத்திரம் கடந்த 11 ஆம் திகதி வரை யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக 179 பேர் இனங் காணப்பட்டுள்ளனர்.

அதில் 50 பேர் யாழ் பிரதேசத்திலும், 30 பேர் சண்டிலிப்பாய் பிரதேசத்திலும், 26 பேர் சாவகச்சேரி பிரதேசத்திலும், 21 பேர் நல்லூர் பிரதேசத்திலும், 14 பேர் உடுவில் பிரதேசத்திலும், கோப்பாய் பிரதேசத்தில் 13 பேரும், தெலலிப்பழை பிரதேசத்தில் 10 பேரும், சங்கானை பிரதேசத்தில் 8 பேரும், கரவெட்டி பிரதேசத்தில் 6 பேரும், வேலணை பிரதேசத்தில் 5 பேரும், காரைநகர் மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களில் தலா ஒருவரும் இந்த மாதத்தில் இனங்காணப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நாட்கள் மாரி காலத்தை அண்மிப்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதற்கான காரணிகள் ஏதுவாக உள்ளன. டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும், நகர்ப்பகுதியில் உள்ளவர்கள் உயிர் மேல் அக்கறையுடன் தமது இருப்பிடங்களை அவதானமாக சுத்தப்படுத்தி வைக்க வேண்டும் எனவும், உடல் நிலையில் சிறிய மாற்றங்கள் தென்பட்டாலும் உடனடியாக அரச வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சையை பெற வேண்டும் என சுகாதாரத் துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.(மு-9)

## அரசியல் கைதிகளி...

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள், இன்று ஜனாதிபதியை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அநுராதபுரம் சிறைச்சாலையில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது 40), கரணவாயை சேர்ந்த மதியரசன சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோர் கடந்த 25 ஆம் திகதியில் இருந்து இன்று வரை மூன்று வாரங்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்குறித்த அரசியல் கைதிகள் மூவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இவர்களுடைய வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்று வந்தது.இந்த வழக்கை சட்டமா அதிபர திணைக்களத்தினர் தற்போது அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியுள்ளனர். அங்கு மொழிப்பிரச்சினை உள்ள காரணத்தினால் பாரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவித்து தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என கோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

இவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாக பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் இதுவரை அரசிடம் இருந்தோ சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்தோ எந்தவிதமான பதிலும் வழங்கப்படவில்லை. நேற்று முன்தினம் யாழ் வந்திருந்த ஜனாதிபதி இவர்கள் தொடர்பில் தீர்க்கமான பதில் எதையும் வழங்கவில்லை. இருப்பினும் கைதிகள் விடயம் தொடர்பில் நேரடியாக கலந்துரையாட வருமாறு கேட்டிருந்தார்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட 3 கைதிகளும் நேற்று முன்தினம் இரவு மயக்கமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முதலில் இவர்களின் உயிரை காப்பாற்ற முன்வருமாறு கைதிகளின் உறவுகள் பல தரப்பிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்த வகையில் ஜனாதிபதியை நேரடியாக சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு நேற்றைய தினம் வடமாகாண ஆளுநரை சந்தித்து கோரியிருந்தனர். அதற்கான ஏற்பாட்டை தான் மேற்கொள்வதாகவும், ஜனாதிபதியிடம கைதிகள் மற்றும் அவர்களின் நிலைப்பாட்டை எடுத்து கூறுவதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் உள்ள அரசியல் கைதிகளின் உறவுகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு செல்லவுள்ளனர். அதன் பின்னர் கொழும்புக்கு சென்று ஐ.நா மனித உரிமைகள் அமை ப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகளை சந்தித்து தமது நிலைப்பாட்டினையும் கோரிக்கையினையும் முன்வைக்கவுள்ளனர்.

ஜனாதிபதியுடன் சந்திப்பதற்கான அனுமதி கிடைத்தவுடன் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். நேற்றைய தினம் ஆளுநருடன் அரசியல் கைதிகளின் உறவுகள் சந்திப்பின் போது அவர்களுக்கு உதவியாக வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (மு-9)

## இது நாட்டுக்கு நல்...

அனுப்பியுள்ள கடிதத்தில் மகாநாயக்க தேரர்கள் இதனை கூறியுள்ளனர்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர், அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் கொட்டுகொட ஸ்ரீ தம்மாவாச தேரர், ராமஞ்ஞய பீடத்தின் மகாநாயக்கர் நாபான பிரேமசிறி தேரர் ஆகியோர் இணைந்து இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

சைட்டம் மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ள தலையிடுமாறு அரச மருத்துவ பீடங்களின் மாணவர்களின் பெற்றோர் சங்கம், சைட்டம் மாணவர்களின் பெற்றோர் ஒன்றியம் இணைந்து மகாநாயக்க தேரர்களிடம் விடுத்த கோரிக்கையை கவனத்தில் கொண்டு இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் இணங்கும் வகையிலான தீர்வு குறித்து கவனம் செலுத்துமாறு மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச மருத்துவப்பீடங்களின் 8 பீடாதிபதிகள் முன்வைத்துள்ள யோசனையை அடிப்படையாக கொண்டு மீண்டும் ஒரு முறை அனைத்து தரப்பினரும் யோசனையை கொண்டு வந்து எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலான தீர்வுக்கு வருமாறும் மகாநாயக்க தேரர்கள் கேட்டுள்ளனர். (மு-11)


நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

கௌரவ கே.என்.விந்தன் கனகரத்தினம்
(வட மாகாண சபை உறுப்பினர்
யாழ்.மாவட்டம்)



வட மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் எமது பாடசாலைக்கு ஓர் இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் நிதியை ஒதுக்கி எமது தேவையை பூர்த்தி செய்தமைக்காக எமது பாடசாலையின் சார்பிலும் பெற்றோர் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களது சமூகப் பொறுப்புள்ள பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/பூம்புகார் அ.த.க பாடசாலை.
அரியாலை கிழக்கு, யாழ்ப்பாணம்.
(1028)



நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

லயன் செப்பேட் நாற்பது நாட்கள் நிரம்பிய நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு.
M.தவராஜா
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே: 077 412 1681
(1029)



விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9942)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



German Language Academy
(கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி)

பத்து வருட காலமாக எமது நிறுவனம் இல.118, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தியில் (புத்த விகாரைக்கு எதிரே) முதலாம் மாடியில் இயங்கி வருகின்றது.

- ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகிறது.
- எமது நிறுவனம் வேறு எங்கும் இயங்கவும் இல்லை, எமக்கு வேறு கிளைகளும் கிடையாது.
- எமது நிறுவனத்தின் பெயரில் இயங்கும் போலி விளம்பரங்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.

German Language Academy
(கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி)

தொ.பே: 0779707322 (1026)

இல.118, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(முதலாம் மாடி - புத்த விகாரைக்கு எதிரே)



அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான போன்ற சனத்தொகை கூடிய நாடுகள இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

0768226243

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

2016 இல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளனர்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.



மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்
(C-9989)

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | 9, வீதி, பளைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.